
# The Bible Standard

## (தமிழ் வெளியீடு)



“உமது வெளிச்சத்தையும், உமது சத்தியத்தையும் அனுப்பியருளும்.
அவைகள் என்னை நடத்தும்.” சங். 43:3

**“LIFT UP A STANDARD
FOR THE PEOPLE”
Isaiah 62 : 10**

**Translated from
BS#908 Sep-Oct 2018**
Published on Oct 27, 2018

**பொருளடக்கம்**

தேவனையும் இயேசுவையும் அவர்களுடைய
ஊழியக்காரர்களையும் ஏற்றுக்கொள்ளுதல் .... 2

தேவனுடைய மன்னிப்பின் ஆசீர்வாதம் ...... 9

செம்மறியாடு வகுப்பாரிலுள்ள சில
வித்தியாசங்கள் ...... 16

# தேவனையும் இயேசுவையும் அவர்களுடைய ஊழியக்காரர்களையும் ஏற்றுக்கொள்ளுதல்

Receiving God, Jesus and their Messengers

**"நான் அனுப்புகிறவனை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக்கொள்ளுகிறான், என்னை ஏற்றுக்கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக்கொள்கிறான் என்று, மெய்யாகவே உங்களுக்குச்சொல்லுகிறேன் என்றார்." (யோவா. 13:20)**

ஆறுதலையும் நம்பிக்கையையும் அளிக்கும் இந்த வார்த்தைகளை இயேசு தம்முடைய விசுவாச உண்மைத் துவமுள்ள அப்போஸ்தலர்களிடத்தில் அவர்கள் அனைவரும், அவருடைய கடைசி பஸ்கா இராப்போஜன விருந்தில் கூடியிருந்த போது அவருடைய விசேஷித்த மரணத்தின் ஞாபகார்த்தத்தை ஏற்படுத்துவதற்கு சற்று நேரத்திற்கு முன் கூறினார். யூதாஸ் அப்போது அங்கு இருந்தாலும் இயேசு அவனை சுத்தமாயிருந்தவர்களாகிய தம்முடைய சீஷர்கள் மத்தியிலிருந்து கவனமாகப் பிரித்து வைத்தார். (வசனங்கள் 11, 18, 21). "**தம்மைக் காட்டிக் கொடுக்கிறவனை அவர் அறிந்திருந்தபடியினால் நீங்களெல்லாரும் சுத்தமுள்ளவர்கள் அல்ல என்றார்:**" மேலும் "**உங்களெல்லாரையுங் குறித்து நான் பேசவில்லை, நான் தெரிந்து கொண்டவர்களை அறிவேன்: ஆகிலும் வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, என்னுடன் அப்பம் புசிக்கிறவன் என்மேல் தன் குதிகாலைத் தூக்கினான்.**" தங்களுடைய ஆண்டவரும் எஜமானருமானவருடைய சித்தத்தை நிறைவேற்றுவதில் சந்தோஷமடைகிறவர்கள் யார் என்றும், நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தின்படி, அவருடைய பிரதிநிதிகளாக ஆசீர்வாதத்தைப் பெறத் தகுதியுள்ளவர்கள் யார் என்றும் இயேசு அறிவார். இயேசுவுக்கு காரியம் முழுவதுமாக நிச்சயமாயிற்று. காரியத்தை முழுவதுமாக வெளிப்படுத்திய பிற்பாடு இரண்டாம் மரணத்தைக் குறித்து எச்சரித்தார். அதாவது அவரைக் காட்டிக் கொடுப்பவனாகிய யூதாஸைப் பற்றி அவன் "**பிறவாதிருந்தால் நலமாயிருக்கும்**" (மத். 26:24) என்றார். இருந்தபோதிலும் யூதாஸ் முழுவதுமாக சாத்தானுடைய கட்டுப்பாட்டுக்கு இடம் கொடுத்தான். "**அப்பொழுது பன்னிருவரில் ஒருவனாகிய ஸ்காரியோத் தென்னும் மறுபேர்கொண்ட யூதாசுக்குள் சாத்தான் புகுந்தான்.**" (லூக். 22:3).

*ஒருவரிலொருவர் அன்புகூருங்கள்*

*நீங்கள் ஒருவரிலொருவர் அன்புள்ளவர்களாயிருந்தால், அதினால் நீங்கள் என்னுடைய சீஷர்களென்று எல்லாரும் அறிந்துகொள்வார்கள் என்றார். (யோவா. 13:35)*

கர்த்தரோடு நெருங்கிய தொடர்பு கொண்டிருந்து, அவருடைய அன்பின் வல்லமையின் கீழிருந்து பரலோகத்தில் பெயர் எழுதப்பட்டிருந்த சீஷன் ஒருவனே அந்த நேரத்தில் கேட்டின் மகனாகி இரண்டாம் மரணத்திற்குள் போனான். "**நான் அவர்களுடனேகூட உலகத்திலிருக்கையில் அவர்களை உம்முடைய நாமத்தினாலே காத்துக்கொண்டேன்: நீர் எனக்குத் தந்தவர்களைக் காத்துக்கொண்டுவந்தேன்: வேதவாக்கியம் நிறைவேறத்தக்கதாக, கேட்டின்மகன் கெட்டுப்போனானேயல்லாமல், அவர்களில் ஒருவனும் கெட்டுப்போகவில்லை.**" அந்த வேளையில் ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதல் மற்றும் ஆவியினால் ஜெநிப்பிக்கப்படுதல் ஆகியவற்றுக்குச் சமமானதாக பாவித்து தேவன் கருதியிருந்த சிலாக்கியத்தை யூதாஸ் பெற்றிருந்தான். அதாவது தேவன் பன்னிருவர் மற்றும் எழுபது பேரையும் முறையே சபையின் அப்போஸ்தலர் மற்றும் தீர்க்கதரிசிகளாக ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குக் கொடுத்த ஆவியினால் அவர்களை முன் அபிஷேகம் செய்தார். (மத். 10:11). மேலும் "**பின்பு அந்த எழுபதுபேரும் சந்தோஷத்தோடே திரும்பிவந்து: ஆண்டவரே, உம்முடைய நாமத்தினாலே பிசாசுகளும் எங்களுக்குக் கீழ்ப்படிகிறது என்றார்கள். இதோ, சர்ப்பங்களையும் தேள்களையும் மிதிக்கவும், சத்துருவினுடைய சகல வல்லமையையும் மேற்கொள்ளவும் உங்களுக்கு அதிகாரங்கொடுக்கிறேன்: ஒன்றும் உங்களைச் சேதப்படுத்த மாட்டாது.**" லூக். 10:17,19; "**அவர்கள்மேல் ஊதி: பரிசுத்த ஆவியைப் பெற்றுக்கொள்ளுங்கள்: எவர்களுடைய பாவங்களை மன்னிக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படும், எவர்களுடைய பாவங்களை மன்னியாதிருக்கிறீர்களோ அவைகள் அவர்களுக்கு மன்னிக்கப்படாதிருக்கும் என்றார்.**" யோவா. 20:22,23 எதிர்பார்ப்புடன் அவர்களுக்கு ஜீவனுக்கான நீதிமானாக்கப்படுதலைக் கொடுத்திருந்தார் என்பதையும் சபையில் அவர்களுக்கு இந்த மிக உயர்ந்த உத்தியோகங்களை அளித்ததின் மூலம் அவர்களை அவர் சரீரத்தில் பொருத்தியிருந்தார் என்பதையும் மேற்கண்ட இரண்டு வேத பகுதிகளும் காட்டுகின்றன.

இவ்வாறாக அவர்களை ஜீவனுக்கான பரீட்சையில் வைத்திருந்ததை தேவன் காண்பிக்கிறார். ஆகையால் அவர், பெந்தெகொஸ்தே நாளுக்கு முன்பாக அவர்

**COURTESY BY :**
The Bible Standard -(ISSN: 1556-8555) Publisher, the **Laymen's Home Missionary Movement-Bible Standard Ministries,** 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700, U.S.A. **Editor, Leon Snyder.** Periodicals Postage paid at Kutztown, PA. **Postmaster:** Send address corrections to The Bible Standard, 1156 St. Matthews Road, Chester Springs, PA, 19425-2700; **Rates: One year's subscription** - $ 12.00 (6 issues); single issues-$2.50 each. **Web Site:** www.biblestandard.com

களுடைய பெயர்களை "**ஆட்டுக்குட்டியானவரின் ஜீவ புஸ்தகத்தில்**" எழுதுமாறு செய்திருந்தார். (லூக். 10:20; எபி. 12:23; வெளி. 13:8) ஜீவனுக்கான நீதிமானாக்கப் படுதலைப் பெற்று, தேவனுடைய பரிசுத்த ஆவியினால் முன் அபிஷேகம் பெற்று இயேசுவானவருடைய விசேஷித்த உதவியாளர்களாக, சபையின் மிக உயர்ந்த இரண்டு உத்தியோகங்களிலும் பங்கு கொண்டு, அவர்களுடைய பெயரைப் பரலோகத்தில் எழுதப் பெற்ற இந்த 82 பேர்களில் ஒருவன் பாவம் செய்வானானால் அது "**மரணத்திற்கேதுவான பாவமாகும்.**" யூதாஸ், இயேசுவை மேசியாவாகவும், தேவனுடைய குமாரனாகவும் ஏற்றுக் கொண்டு, இந்த முன் அபிஷேகத்தின் சம்பந்தமான ஆசீர்வாதங்களை அனுபவித்துக் கொண்டு மூன்றரை ஆண்டுகள் ஆண்டவருடன் நெருங்கிய ஐக்கியம் கொண்டிருந்து கடைசியாக இயேசுவின் வாயின் வார்த்தைகளால் உறுதியாக எச்சரிக்கப்பட்டான். "**இயேசு அவர்களை நோக்கி: பன்னிருவராகிய உங்களை நான் தெரிந்துகொள்ள வில்லையா? உங்களுக்குள்ளும் ஒருவன் பிசாசாயிருக்கிறான் என்றார்.**"(யோவா. 6:70). மேலும் (மத். 26:21-25) யூதாஸ் முழு விருப்பத்துடன் துணிகரமாகப் பாவம் செய்து இரண்டாம் மரணத்திற்குள் சென்றான்.

நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்தில் தம்முடைய அப்போஸ்தலர்களுக்கு மிகவும் தேவையாயிருந்த ஊக்கமளிக்கக் கூடிய வார்த்தைகளை இயேசு கொடுத்துள்ளார். இதைப்போல ஏற்கெனவே அவர் மத். 10:40-ல் அவர்களுக்கு கூறியுள்ளார். "**உங்களை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்: என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான்:**" ஆனால் அந்த நேரத்தில் ராஜ்யத்தின் இந்த செய்தியை அறிவிக்கும்படி இயேசுவானவர் அனுப்பியவர்களில் யூதாசும் ஒருவனாயிருந்தான். பின்னாளில் காட்டிக் கொடுப்பவனாக யூதாஸ் நிரூபிக்கப்பட்டிருந்தாலும், அவன் ஒரு பிரசங்கியாராக இருந்தபோது சிலர் அவனை ஏற்றுக்கொண்டு அவனுடைய ஊழியத்தி னிமித்தம் மனம் மாறி ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டார்கள் என்பதில் சந்தேகமில்லை.

நம்முடைய ஆண்டவரால் ஊழியக்காரர்களாக அனுப்பப்படுபவர்களின் இருதயத்தை அறியவோ அல்லது அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பதை புரியவோ முடியவில்லையாயினும், அவருடைய ஊழியக்காரர்களாக சத்தியத்தை போதிப்பவர்கள் என்று சான்று கொடுப்பவர்களை, அவருடைய ஸ்தானாபதிகளாக முரண்பாடு வெளிப்படாத வரையிலும், நாம் ஏற்றுக் கொள்ள வேண்டும். இறுதியில் அவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது நிரூபிக்கப்படலாம். ஆனாலும் சிலர் அந்நியர்களை ஏற்றுக் கொள்ளும்போது அறியாமல் கொள்ளைக்காரர்களை (robbers) ஏற்றுக் கொண்டுள்ளனர். ஆனாலும் தோற்றங்கள் அனுகூலமாக இருக்கும்மட்டும் விருந்தோம்பல் செய்கிறவர்களாக இருக்க வேண்டும். ஏனெனில் இவ்விதமாக சிலர் ஆண்டவருடைய தூதர்களை அல்லது ஊழியக்காரர்களை உபசரித்துள்ளனர். ஒருவன் கர்த்தருடைய ஊழியக்காரனாக நமக்கு சத்தியத்தின் ஆசீர்வாதங்களையும், அதன் ஆவியையும் கொண்டு வந்தவனாயிருந்தும் கடைசியில் தனக்கு மோசம் வருவித்துக் கொண்டிருந்தாலும்கூட அவன் கர்த்தருடைய ஊழியக்காரர்களில் ஒருவனாக இருந்திருந்த காலத்தில் அவனை ஏற்றுக் கொண்டபோது, கர்த்தரிடமிருந்து, ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டோம்.

இந்த கட்டுரையில் நாம் அநேக வேத வசனங்களையும் அதைத் தொடர்ந்து வரும் வார்த்தைகள் மூலம் அதன் அர்த்தத்தை விளக்க உதவும் வேத வசனத்தையோ அல்லது குறிப்பிட்ட வார்த்தையையோ உபயோகித்துள்ளோம். பாட பகுதியின் பின்னனி என்பது ஒரு பிரசங்கம் அல்லது கட்டுரையின் பாகங்களாக ஒரு வார்த்தையை அல்லது ஓர் பாட பகுதியை சூழ்ந்து கொண்டு அதன் கருத்து மீது வெளிச்சத்தை வீசக் கூடியது ஆகும். நமது பாட தலைப்பு வசனத்தையும் அதற்கான சந்தர்ப்பசூழலுடனான தொடர்பையும் நாம் ஆராய்கிறபடியால் அது நமக்கு தெளிவாகிறது.

இயேசுவானவர் தம்முடைய சீஷர்களுக்குத் தாழ்மையையும், எளிமையையும் பற்றிய பாடத்தை கால்களைக் கழுவிய எடுத்துக்காட்டின் மூலம் மிக ஆழமாகப் பதியச் செய்து (யோவா. 13:1-17) அவர்களில் ஒருவன் தன்னைக் காட்டிக் கொடுப்பான். (வசனம் 21) என்ற துயரச் செய்தியை அவர்களுக்குக் கூறுவதற்கு முன்பாக அவர்களை மெதுவாகத் தயார் செய்தார் (வசனம் 18); அவர்களை பலப்படுத்தினார். (வசனம் 19). இயேசு நம்முடைய பாட தலைப்பு வசனத்திலுள்ள வார்த்தைகள் மூலமாக எத்தகைய விதமாய் அவர்களை ஏற்ற சமயத்தில் தைரியப்படுத்தியுள்ளார். (வசனம் 20) அவர்களுடைய தற்பெருமையற்ற தாழ்மையான, எளியோரை நேசிக்கும் பண்புகளினால் சிலர் அவர்களைப் புறக்கணித்திருக்கலாம். அவர்களில் ஒருவன் காட்டிக் கொடுத்தவனாயிருந்ததால் சிலர் அவர்களிடம் அற்பமான அளவு மட்டுமே நம்பிக்கை கொண்டிருந்து அவர்களுடைய சுவிசேஷ செய்தியை ஏற்க மறுத்திருக்கலாம். மேலும் அவர்களுடைய எஜமான் இனிமேல் ஒரு மனிதனாக (நபராக) அவர்களோடிருந்து அவர்களுக்குத் தைரியமூட்டி ஆதரவு கொடுக்க இனி இருக்கப்போவதில்லையாதலால் அவர்கள் அதைரியப்பட்டிருக்கலாம்.

ஆகையால் தம்முடைய ஸ்தானாபதிகளாக அவர்களை அனுப்ப, அவர் அவர்களை அழைத்த அழைப்பை நிறைவேற்றவும் தகுதியுள்ளவர்களாகவும் முன்னேறிச் செல்ல உதவியாக இயேசுவானவர் அவர்களுக்கு ஓர் அற்புதமான மறுஉறுதியளித்து அவர்களைத் திடப்படுத்தினார். (யோவா. 20 : 21). யூதாஸின் துரோகம் தம்முடைய மற்ற அப்போஸ்தலர்கள் மீது ஏற்படுத்தும் இயல்பான மனக்குழப்ப அழுத்தங்களை எதிர்பார்த்தவராக, அவர் மிகவும் மனப்பூர்வமாக இந்த உற்சாகப்படுத்துதலைக் கூறினார்: "**நான் அனுப்புகிறவனை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்கிறான்: என்னை ஏற்றுக் கொள்கிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான் என்று மெய்யாகவே, மெய்யாகவே** (கிரேக்க பாஷையில் – ஆமென்,


ஆமென்) **உங்களுக்குச் சொல்லுகிறேன்**" (யோவா. 13:20) என்று சொன்னார்.

இதே பிரசங்கத்தின் பிற்பகுதியில் (யோவா. 14) இயேசுவானவர் அவருடைய சீஷர்களிடம் அவர் அவர்களை விட்டுப்போகும் வேளை வந்துவிட்டதென்றும், ஆனால் அவர்கள் கலங்காமலும், திகையாமலும் இருக்கும்படியாகவும் கூறினார். அவர்களை விட்டுவிட்டு போனாலும் அவரே வழியும் சத்தியமும் ஜீவனுமாக நிலைத்திருப்பதாகவும், அவர்களைத் தேற்றுதலற்றவர்களாக விடாமல் அவர்களிடம் வந்து அவர்களுடைய வேண்டுதல்களுக்குப் பதில் கொடுப்பேன் என்றும்; பிதாவானவர் அவருடைய நாமத்தில் அதாவது அவருடைய வல்லமையில், அவருடைய அதிகாரத்தில் அவர்களுக்குப் பரிசுத்த ஆவியை அனுப்புவார் என்றும், அந்த ஆவியானது அவருடைய எல்லா போதகங்களையும், அவர்களுக்கு நினைப்பூட்டி தெளிவுப்படுத்தும் என்றும் கூறினார். இயேசு அவருடைய அப்போஸ்தலரைவிட்டு பிரிந்து செல்லும்போது, இந்த வார்த்தைகளில் எப்பேற்பட்ட ஆச்சரியமான சமாதானத்தையும், பெரிய ஆறுதலையும் மனமார்ந்த உறுதியையும் கொடுத்துள்ளார்!

## சபைக்குப் பல்வேறு ஊழியர்கள் கொடுக்கப்பட்டுள்ளனர்

நமது பாட தலைப்பு வசனத்தில் (யோவா. 13:20) ஒரு பொதுப்படையான அறிவிப்பை இயேசுவானவர் கூறியிருப்பது மத். 10:40-ல் கூறப்பட்டுள்ளபடி அது ஒரு வரையறையை மட்டுமல்லாது, அவருடைய ஜனங்களில் மற்றெல்லாரையும் அதாவது அவர் அனுப்பியவர்களையும், அவர்களை ஏற்றுக் கொண்டவர்களையும் சேர்த்தே உள்ளது என்பதை நாம் கவனத்தில் கொள்ள வேண்டும். "**முதலாவது கர்த்தர் மூலமாய் அறிவிக்கப்பட்டு பின்பு அவரிடத்தில் கேட்டவர்களாலே நமக்கு உறுதியாக்கப்பட்ட இவ்வளவு பெரிய இரட்சிப்பைப்**" பற்றிய காரியங்களை அடையாளங்களினாலும், அற்புதங்களினாலும் பலவிதமான பலத்த செய்கைகளினாலும், தம்முடைய சித்தத்தின்படி பகிர்ந்து கொடுத்த பரிசுத்த ஆவியின் வரங்களினாலும் தேவன் தாமே சாட்சி கொடுத்ததுமாயிருக்கிற இவ்வளவு பெரிதான இரட்சிப்பைக் குறித்து நாம் கவலையற்றிருப்போமானால் தண்டனைக்கு எப்படி தப்பித்துக் கொள்வோம். (எபி. 2:3,4). நம்முடைய கர்த்தர் அதற்குபின்பு "**உன்னதத்திற்கு ஏறி சிறைப்பட்டவர்களைச் சிறையாக்கி மனுஷர்களுக்கு** (கிரேக்க பாஷையின்படி இந்த) **வரங்களை அளித்தார் என்று சொல்லியிருக்கிறார்.**" (எபே. 4:8) எபே. 4:11-ம் வசனம் (Diaglott மொழிபெயர்ப்பு) இந்த வரங்களின் தன்மையை விவரிக்கிறது: "**அவர் உண்மையாகவே அப்போஸ்தலரையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகர்களையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் கொடுத்தார்.**" பூமியிலிருந்து சிறுமந்தை முழுவதும் எடுத்துக் கொள்ளப்பட்ட பிறகும்கூட இந்த ஒழுங்குமுறையின் வரிசைக்கிரமம் தொடர்ந்து நிலைத்திருக்கிறது. (E.Vol. 7, pp. 282-285)

இயேசுவானவர் தம்முடைய ஜனங்களுக்கு ஏன் இந்த வரங்களைக் கொடுத்தார்? "**அபிஷேகம் பண்ணப்**




**பட்டவரின் சரீரமாக கட்டப்படுவதற்கு பரிசுத்தவான்கள் பூரண தகுதியுள்ளவர்களாகும்படி சுவிசேஷ ஊழியத்தின் வேலைக்காகவும்**" மேலும் நாம் அனைவரும் தேவனுடைய குமாரனைப் பற்றும் விசுவாசத்திலும், அறிவிலும் ஒருமைப்பாட்டை அடைந்து, அபிஷேகம் பண்ணப்பட்டவரின் நிறைவான வளர்ச்சியின் அளவுக்குத்தக்கதாக பூரண புருஷராக வளர்ச்சியடைந்து, அதனால் இனி மேலும் நாம் குழந்தைகளாயிராமல் மனிதர்களுடைய தந்திரமான சூதும் வஞ்சிக்கிறதுமான, திட்டமிட்ட வஞ்சனையான போதகமாகிய ஒவ்வொரு காற்றினாலும் அலைக்கழிக்கப்படாமல் அன்பில் உண்மையுள்ளவர்களாய் தலையாகிய அபிஷேகம் பண்ணப்பட்டவருக்குள்ளாக எல்லாவற்றிலும் வளர்ச்சி அடைவதற்கு அப்படிச் செய்தார் என்று அப்போஸ்தலன் விவரிக்கிறார். (எபே. 2:10-15; - டயக்லாட் மொழிபெயர்ப்பு)

இப்பொழுது சிறுமந்தை மற்றும் திரள் கூட்ட வகுப்பார்கள் நிறைவடைந்து, வாலிபரான பாத்திரவான் வகுப்பார் தங்கள் ஓட்டத்தை முடித்துக்கொண்டிருக்கும் காலத்தில் நாம் இருக்கிறோம். யேகோவா தேவனுடைய தொடர்ந்தேர்ச்சியான வழிநடத்துதலின்கீழ் அதே விதமான நல்ல வேலையானது பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்களுக்காக நடைபெற்று வருகிறது; ஏனெனில் அவர்கள் எவ்விதம் தேவனுக்கு ஊழியம் செய்ய வேண்டும் என்கிற அறிவுரைகள் தேவைப்படுகிறது. அது எபிபெனி பாளையம் கட்டுதல் முதலான வேலைகள் மட்டுமல்லாது, மேலும் (மிகவும் முக்கியமானது) இனிமேல் அவர்கள் குழந்தைகளாயிராமலும், இங்குமங்குமாய் அலைக்கழிக்கப்படாமலும் மனிதருடைய கைத்திறனாலும், சூதினாலும், தந்திரத்தினாலும், வஞ்சிக்கிறதற்காக பதிவிருப்பவர்களுடைய போதகமாகிய 'காற்று' ஒவ்வொன்றிலும் சிக்குண்டு, இங்குமங்குமாய் இழுபடாமலுமிருக்கும்படி கிறிஸ்துவின் தலைமையின்கீழ் ஒருவரையொருவர் மகா பரிசுத்தமான விசுவாசத்தில் கட்டப்படுவதற்கும் அறிவுரைகள் தேவைப்படுகிறது.

தேவன் தம்முடைய ஜனங்களுக்குத் தேவையான உதவியை எப்பொழுதுமே கொடுத்து வருகிறார். அதன்படியே பழைய ஏற்பாட்டின் காலத்தில் அவர் தம்முடைய ஜனங்களிடத்தில் நியாயப்பிரமாணத்தையும், தீர்க்கதரிசிகளையும் அனுப்பினார். சுவிசேஷ யுகத்தில் தேவன், "**தமது சித்தத்தின்படி அவயவங்கள் ஒவ்வொன்றையும் சரீரத்திலே வைத்தார்.**" (1 கொரி. 12:18,28). தம்முடைய ஜனங்களுக்கு அப்போஸ்தலரையும், தீர்க்கதரிசிகளையும், சுவிசேஷகர்களையும், மேய்ப்பர்களையும், போதகர்களையும் ஏற்படுத்தியபோது, அவர்களை அவர்களுடைய

உலக ஞானத்தின்படி தெரிந்து கொள்ளாமல் (அவர்களில் சிலர் உலகப் பிரகாரமான பாடங்களைப் படித்தவர்–களாயிருந்தாலும்) விசேஷமாக அவருடைய சித்தத் திற்கும், ஊழியத்திற்கென்றும் தங்களை முழுவதுமாகப் பிரதிஷ்டை செய்ததினாலும் (1 கொரி. 1:26-29; யாக். 2:5) அதில் அவர்கள் உண்மையுள்ளவர்களாய் இருந்ததி னாலும் தெரிந்து கொண்டார். மேலும் யாக். 2:5-ல் "**என் பிரியமான சகோதரரே, கேளுங்கள், தேவன் இவ்வுலகத்தின் தரித்திரரை விசுவாசத்தில் ஐசுவரியவான்களாகவும் தம்மிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குத் தாம் வாக்குத்தத்தம்பண்ணின ராஜ்யத்தைச் சுதந்தரிக்கிறவர்களாகவும் தெரிந்துகொள்ள வில்லையா?**" என்று கூறப்பட்டுள்ளது. தேவன் தம்முடைய ஊழியக்காரர்களுக்கு இயேசுவானவரின் மூலமாய் அவர்–களுக்குரிய ஊழியத்தை ஒப்படைக்கிறார். ஆடுகளுக்காக சுயதியாகம் செய்யும் அவர்களுடைய ஆவியினாலும், வேத வசனங்களை இசைவிணக்கமாகப் பொருள் விளக்கிப் போதித்து அவைகளுக்கு ஆகாரங் கொடுக்கும் ஆற்றலினாலும் இயேசுவின் கீழ் உள்ள மேய்ப்பர்களை நாம் அறிந்து கொள்ளலாம்.

தேவன் தம்முடைய ஜனங்களுக்காகப் போதகர்–களைப் பிரித்தெடுக்கிறார் அல்லது எழும்பச் செய்கிறார் என்பது வேத வசனங்களில் வெளிப்படையாக இருக்கிறது. (1 கொரி. 12:27-31; எபே. 4:11,12) "**அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்குப் போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி.**" (2 தீமோ. 2:2). சுவிசேஷ யுகத்தில் இது உண்மையாக இருந்தது போல இன்றைய நாள் வரைக்கும் இருக்கிறது. தம்முடைய ஜனங்களைப் போதித்து பக்தி விருத்தியடையச் செய்யும் வேலையிலும், பொதுமக்களுக்கு சத்தியத்தைச் சாட்சியாக அறிவிப்பதிலும் தம்முடைய பிரதிஷ்டை செய்த ஊழியக்காரர்களில் சிலரை மற்றவர்களைவிட மிகப் பெரிய அளவில் உபயோகிப்பது தேவனுக்குப் பிரியமா யிருக்கிறது. இயேசுவானவர் தேவனால் அனுப்பப்பட்ட போதகர். (யோவா. 17:18,19; 20:21). அவருடைய சீஷர்கள் போதிப்பதற்காகவும், கற்பிப்பதற்காகவும், ஞானஸ்நானம் கொடுப்பதற்காகவும் அனுப்பப்பட்டார்கள். (மத். 28:19). பிரதிஷ்டை செய்த ஒவ்வொரு தேவனுடைய பிள்ளையும் ஏதாவது ஒரு வகையில் அவருடைய ஊழியக்காரரா யிருக்கிறார்கள். அவருடைய பரிசுத்த ஆவியின் வல்லமை–யின் கீழ் சந்தோஷம் தரும் நற்செய்தியைப் பிரசங்கிக்க அனைவரும் உத்தரவு பெற்றிருக்கிறார்கள். (ஏசா. 61:1-3). இருந்தாலும் இந்த வேலையின் பல்வேறு பகுதிகளுக்கு பலதரப்பட்டவர்களை பொருந்தச் செய்திருக்கிறார். "**ஊழியங் களிலேயும்** (நிர்வாகங்களிலும்) **வித்தியாசங்கள் உண்டு**" "**கிரியைகளிலேயும் வித்தியாசங்கள் உண்டு.**" (வெவ்வேறான வேலை செய்யும் முறைகள்) (1 கொரி. 12:4-6).

இந்த சுவிசேஷ யுகத்தின் முடிவில் தேவனுக்குப் பிரியமாகத் தங்கள் ஜீவியத்தைப் பிரதிஷ்டை செய்தவர்க ளெல்லாரும் இயேசு கிறிஸ்துவைத் தங்களுடைய கர்த்தராகவும், இரட்சகராகவும் ஏற்றுக் கொண்டு அவருடைய தலைமையின்கீழ் வருகிறார்கள். அவரே அவர்களுடைய இரட்சிப்பின் அதிபதியாயிருக்கிறார். அவர்கள் சிலுவையின் நல்ல போர் வீரர்களாகத் தங்களைப் பதிவு செய்திருக்கிறார்கள். அவர் அவர் களுடைய நல்ல மேய்ப்பர், "**அவர்கள் அவருடைய சத்தத்தை அறிந்திருக்கிறபடியால் அவருக்குப் பின் செல்லுகிறார்கள்.**" (யோவா. 10:4,14). அவருடைய பிரதிஷ்டை செய்த ஜனங் களெல்லாரும் அவர்களுடைய வழிநடத்துதலுக்காக அவரை நோக்கிப் பார்க்கும்போது அவர்களுடைய தலையாக, அவர்களுடைய காரியங்களெல்லாவற்றையும் அவரே திட்டமிட்டு நடத்துகிறார். தலையாகிய இயேசு–வானவர் தம்முடைய சரீர அங்கத்தினர்களுக்கு அவர்–களுடைய தற்காலிக பூமிக்குரிய ஜீவிய காலத்தின்பொழுது எப்படி அவர்களுக்காக இதைச் செய்தார் என்பதை நாம் கவனித்துப் பார்த்தால் நமக்காக இது எப்படி செய்யப்படும் என்பதை நாம் நன்கு அறிந்து கொள்வோம். ஏனெனில், இந்நாளிலுள்ள தம்முடைய பிரதிஷ்டை செய்த ஜனங் களுக்காகவும் அவர் அதேமாதிரியைப் பின்பற்றி அப்பொழுதிருந்தது போலவே செயல்படுகிறார்.

## கண், காது, வாய் ஆகியவற்றின் உத்தியோகங்கள்

முழு சரீரத்துக்கும் பயன்படும்படிக்கு சரீரத்தின் அவயவங்களுக்கு கண், காது, வாய் ஆகியவற்றின் தன்மையுள்ள மிக உயர்ந்த உத்தியோகங்கள் சபைக்குத் தலையாகிய இயேசுவானவரால் ஒப்படைக்கப்பட்டன. கண்ணும் காதும் செய்தி அறியக்கூடிய வழியாகவும், வாய் அறிவிக்கும் வழியாகவும் இருக்கின்றன. இந்த வழிகள் தேவனுடைய ஜனங்களில், விசேஷமாக நட்சத்திர அங்கத் தினர்களால் செயல்படுத்தப்பட்ட சில பிரதானமான உத்தியோகங்களோடு ஒத்திருக்கிறது.

'கண்' பார்வைக்கு உரியதாகும். ஆதிச் சபையில் அப்போஸ்தலர்களாகிய யோவானுக்கும் பவுலுக்கும், சுவிசேஷ யுக அறுவடையில் ரஸல் போதகருக்கும், ஜாண்சன் போதகருக்கும் 'தலையின்' தனிச் சிறப்பு வாய்ந்த இந்த தன்மை அநேகமாக சபையின் மற்ற அங்கத்தினர்களைவிட அதிகமாகக் கொடுக்கப் பட்டிருந்தது. இது ஒரு சிலாக்கியமாகும்; இதில் அவர்கள் மிகவும் களிகூர்ந்தார்கள்.

இயேசுவானவர் வரவிருக்கிற சம்பவங்கள் சம்பந்த மான அதிசயமான வெளிப்பாடுகளை பிதாவிடமிருந்து பெற்றுக் கொண்டார். (வெளி. 1:1). அவர் தம்முடைய தூதனை அனுப்பி தம்முடைய ஊழியக்காரனாகிய யோவானுக்கு அடையாளமாக அறிவித்தார். இவ்வாறு யோவான் சபைக்குக் "கண்ணாக" விளங்கினார். அப்போஸ்தலனாகிய யோவான் மூலம் குறித்த காலம் வரும்போது வெளிப்படுத்தலின் அடையாளங்கள் விடு–விக்கப்படுவதை, கர்த்தருடைய ஜனங்களால் பார்க்க முடிந்தது. இன்னமும் பார்க்க முடிகிறது. மேலும் அப்போஸ்தலனாகிய பவுல் இந்த வரத்தை அல்லது உத்தியோகத்தைக் குறிப்பிடத்தக்க அதிகமான அளவில் பெற்றிருந்தார். மற்ற அப்போஸ்தலர்கள் அதனைக் குறைந்த அளவில் பெற்றிருந்தனர்.

பரிசுத்த பவுல் கர்த்தரிடமிருந்து மிகுதியான அளவில் தரிசனங்களையும், வெளிப்பாடுகளையும் பெற்றிருந்தார். “**நான் அதை ஒரு மனுஷனால் பெற்றது மில்லை, மனுஷனால் கற்றதுமில்லை, இயேசுகிறிஸ்துவே அதை எனக்கு வெளிப்படுத்தினார்.**”(கலா.1:12). “**அங்கே இராத்திரியிலே பவுலுக்கு ஒரு தரிசனம் உண்டாயிற்று: அதென்ன வெனில், மக்கெதோனியா தேசத்தான் ஒருவன் வந்துநின்று: நீர் மக்கெதோனியாவுக்கு வந்து எங்களுக்கு உதவிசெய்ய வேண்டுமென்று தன்னை வேண்டிக் கொண்டதாக இருந்தது.**” (அப்.16:9). “**இந்த இரகசியத்தை அவர் எனக்கு வெளிப்படுத்தி அறிவித்தார். இதைக்குறித்து நான் முன்னமே சுருக்கமாய் எழுதியிருக்கிறேன்.**” (எபே. 3:3,4). ஆயினும் அவர் பரதீசை (முந்திய சீருக்கு திரும்பவும் கொண்டு–வரப்பட்ட பூமியை) பற்றி தம்முடைய தரிசனத்தில் மிகத்தெளிவாகக் கண்டதையும் கேட்டதையும் அறிவிக்க அவருக்கு அனுமதியளிக்கப்படவில்லை. (2 கொரி. 12:3). இந்தத் தரிசனமானது, கடந்த கால, தற்கால மற்றும் “**இனி வரும் யுகங்கள்**” சம்பந்தமான தேவனுடைய திட்டத்தையும் அன்பையும் பற்றிய அவருடைய அறிவை ஆழமும், விசாலமுமாக்கியது என்பதில் சந்தேகமில்லை. ஆதலால் எந்த ஒரு புதிய ஏற்பாட்டு எழுத்தாளரையும்விட அவருடைய எழுத்துக்கள் ஆழமும், நிறைவும், அழகும் உடையதா யிருக்கின்றன. மாம்ச இஸ்ரயேலர் ஒதுக்கித் தள்ளப்பட்டு, சபையின் கிருபையின் மூலமாக அவர்கள் கிருபை பெறும்போது வருங்காலத்தில் சபை மூலமாக அவர்கள் தேவ தயவுக்கு மீண்டும் கொண்டுவரப்படுவார்கள் என்று ரோம. 11:25-33-ல் தேவனுடைய ஏற்பாட்டுக்குத் தொடர்–புடையவைகளை விளக்கும்போது அந்த மகிமையுள்ள வெளிப்பாடுகள் அதன் எல்கையையே தொட்டு விடுவ தாகக் காணப்படுகிறார்.

அந்த வருங்கால நடவடிக்கைகள் எல்லாவற்றைப் பற்றியும் தெளிவாக சொல்ல அவர் எவ்வளவு ஆவலுள்ள வராயிருந்தார் என்பது தெரிய வருகிறது. ஆனாலும் அவைகள் சுவிசேஷ யுகத்தின் அறுப்பு வரும்வரைக்கும் தெளிவாக வெளிப்படுத்தப்படவும் புரிந்து கொள்ளவும் முடியாதபடி இருக்க வேண்டும். “**ஆ! தேவனுடைய ஐசுவரியம், ஞானம், அறிவு என்பவைகளின் ஆழம் எவ்வள வாய் இருக்கிறது.**”

‘காதினுடைய’ (செவி) இயல்பு கண்ணுக்கு அடுத்த–தாக இருந்தாலும் மிகவும் முக்கியமானதே. அது தேவ வசனத்தையும் ஏற்பாட்டையும் கேட்டு, புரிந்து கொண்டு, மதிப்புணர்ந்து பாராட்டும் வரம் அல்லது இயல்பாகும். சுவிசேஷ யுகம் முழுவதிலும் அதை அப்போஸ்தலர்களும் மற்ற நட்சத்திர அங்கத்தினர்களும் (மிகவும் குறிப்பிடத்தக்க விதத்தில் சிலர் மற்றவர்களைவிட அதிகமாக) பெற்றி ருந்தனர். இந்த வரத்தைப் பயன்படுத்தியதால் அப்போஸ் தலர்களும் (விசேஷமாக பவுல், பேதுரு, யோவான் ஆகியோரும்) மற்ற நட்சத்திர அங்கத்தினர்களும் (குறிப்பிடத்தக்க விதத்தில் சுவிசேஷ யுக அறுவடையில் ரஸல் போதகரும், ஜாண்சன் போதகரும்) தீர்க்க தரிசனங்களின் நிறைவேறுதலைச் சுட்டிக்காட்டவும், தேவனுடைய ஆழமான காரியங்களை அறிந்து கொள்ளவும் திறமை பெற்றிருந்தனர்.

தலைக்கு உரியதான மற்றொரு இயல்பு வாய் (பேசுதல்) ஆகும். ‘சரீரத்தின்’ பிரயோஜனத்திற்காக பேசுத லாகிய இந்த சிலாக்கியத்தை பல்வேறு அங்கத்தினர்–களுக்கு, தெரிந்தெடுத்து இயேசுவானவர் ஒப்புவித்தார். இந்த வரத்தை அப்போஸ்தலர் எல்லாரும் மற்ற நட்சத்திர அங்கத்தினர்களும் பல்வேறு அளவுகளில் பெற்றிருந் தாலும் விசேஷித்து குறிப்பிடத்தக்க அளவில் அது பேதுருவிடமிருந்தது. பவுல் பெரிய தர்க்கவாதியாகவும், கண் மற்றும் காதின் இயல்புகளை பிரதானமான அளவில் பெற்றிருந்தாலும் பிரசங்கக் கலையில் (அப்போஸ்தலன் அல்லாத) அப்பொல்லோ மற்றும் சிலரைவிட குறைவான–வராக இருந்தார் என்பது வெளிப்படையாயிருக்கிறது. “**அப்பொழுது அலெக்சந்திரியா பட்டணத்தில் பிறந்தவனும் சாதுரியவானும் வேதாகமங்களில் வல்லவனுமான அப்பொல்லோ என்னும் பேர்கொண்ட ஒரு யூதன் எபேசு பட்டணத்துக்கு வந்தான்.**” (அப். 18:24); “**நான் பேச்சிலே கல்லாதவனா யிருந்தாலும், அறிவிலே கல்லாதவனல்ல; எந்த விஷயத்திலும் எல்லாருக்குமுன்பாகவும் உங்களுக்குள்ளே நாங்கள் வெளிப் பட்டிருக்கிறோமே.**”(2 கொரி. 11:6).

மாம்ச சரீரத்தில் கண், காது, வாய் ஆகியவற்றின் வேலைகள் தலைக்கே உரியவை. இந்தப் பிரதானமான உத்தியோகங்கள் சுவிசேஷ யுகத்தில் எல்லாருக்கும் பிரயோஜனமாக உபயோகிக்கும்படி குறிப்பிட்ட சில அங்கத்தினர்களிடம் (குறிப்பாக நட்சத்திர அங்கத்தினர்–களுக்கும் அவர்களுடைய விசேஷித்த உதவியாளர்–களுக்கும்) தம்முடைய சரீரமாகிய சபைக்குத் தலை யாயிருக்கிற இயேசுவானவரால் நம்பி ஒப்படைக்கப்பட்டன. “**தேவனே எல்லாருக்குள்ளும் எல்லாவற்றையும் நடப்பிக் கிறவர். எல்லாருடைய பிரயோஜனத்திற்காகவும் ஆவியி னுடைய வெளிப்பாடுகள் ஒவ்வொருவனுக்கும் அளிக்கப் பட்டுள்ளன**” (1 கொரி. 12:6,7 - Diaglott) அவர்களுடைய அன்பின் பிரயாசங்களால் நாம் இன்னமும் பயன டைகிறோம். அவைகளுக்காக நாம் தேவனுக்கு நன்றி செலுத்துவோம்.

## சரீரத்தின் பல்வேறு செயல்களைக் கவனித்துப் பார்த்தல்

தலைக்கு எதிர்பாகத்திலும் சரீரத்திற்குப் பொருத்த–மானதாக பாதங்கள், கைகள் போன்ற அவயவங்களாகிய



அங்கத்தினர்கள் இருக்கின்றனர். பாதங்கள் முன்னேறிச் செல்கிறது. இந்த நோக்கிலிருந்து பார்க்கும்போது பொது-விலும் (அனைத்து சபைகளிலும்), உள்ளூரிலேயும் சுவிசேஷகர்கள் (இவாஞ்ஜிலிஸ்டுகள்) செய்யும் மிஷனரி வேலையைக் குறிக்கிறது என்று கருதலாம். கைகள் சரீரத்தைக் கவனித்துப் பாதுகாத்து உதவி செய்து போஷிக்கிறது. இந்த நோக்கிலிருந்து பார்க்கும்போது பொதுவிலும், உள்ளூரிலேயும் போதகர்கள், உபாத்தியாயர்கள் செய்த ஊழியத்திற்கு கிடைத்த பலனாகக் கருத வேண்டும். மானிட சரீரத்தின் நடு உடற்பகுதியானது அதனுடைய சுவாசிக்கும் ஆற்றலோடும், அதனுடைய இரத்த ஓட்ட மண்டலத்தோடும், உணவிலுள்ள சத்துக்களை கிரகித்துக் கொடுக்கும் அதனுடைய முறைகளோடும்கூட, கர்த்தருடைய ஜனங்களின் பொதுவிலான சமஸ்த கூட்டத்திற்கு ஒத்திருக்கிறது. அனைத்து மண்டலங்களும் ஒன்று சேர்ந்து வேலை செய்து சரீரத்தைக் கட்டியெழுப்பி, சரீரம் முழுவதும் வேலை செய்யும் அவயவங்களைப் பலப்படுத்தி தலையின் சித்தத்தைச் செய்வதற்காக அவைகளைத் தயார் செய்கிறது. பிலி. 4:13 "**என்னைப் பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ்செய்ய எனக்குப் பெலனுண்டு.**"

அப்படியே கிறிஸ்துவின் சரீரம் முழுவதும் ஆவிக்-குரிய ஆகாரத்தைப் பயன்படுத்துவதின் மூலம் பலமாக வளர்ந்து கட்டி எழுப்பப்பட்டது; அதற்கு ஊழியஞ்செய்த அவயவங்களுக்கு விசேஷமாக அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்-கள் ஆகியோருக்கு (எபே. 4:16) அதனுடைய பெலனையும், ஆதரவையும், பகிர்ந்தளித்தது. அதே கொள்கைகளும், முறைகளும், இந்நாளிலுள்ள பிரதிஷ்டை செய்த தேவ ஜனங்களுக்குள்ளும் கிரியை செய்து, பொதுவான வரிசைகளில் விசுவாச வீட்டாரின் பல்வேறு அங்கத்தினர்-களுக்குள்ளும் தொடர்ந்து கிரியை நடப்பிக்கிற மகா பரிசுத்த விசுவாசத்தில் ஒருவரையொருவர் கட்டி எழுப்புகின்றன.

பெரிய உலக ஸ்தாபனங்கள் கிறிஸ்துவின் பெயருக்கு உரிமை கொண்டாடினாலும், அவருடைய தலைமை ஸ்தானத்தையும் (அவருடைய நடத்துதலையும், அதிகாரத்தையும்) அவருடைய உபதேசங்களையும் ஏற்றுக் கொள்ளவில்லை. மேலும் உண்மையாக அவருடைய அடிச்சுவட்டை பின்பற்றி நடப்பவர்களோடுகூட பொது வானது என எதையும் அவைகள் கொண்டிருக்கவில்லை. அவர்கள் அவர்களுக்குச் சொந்தமான தலைகள், தீர்க்கதரிசிகள், மேய்ப்பர்கள், போதகர்கள் முதலியவர்-களை வைத்திருக்கிறார்கள். ஆனால் அவர்கள் உண்மை யானவர்களும், தகுதியானவர்களும் இல்லை. "**மூப்பனும் கனம்பொருந்தினவனுமே தலை, பொய்ப்போதகம் பண்ணுகிற தீர்க்கதரிசியே வால். இந்த ஜனத்தை நடத்துகிறவர்கள் எத்தருமாய், அவர்களால் நடத்தப்படுகிறவர்கள் நாசமடை கிறவர்களுமாய் இருக்கிறார்கள்.**" (ஏசா. 9:15,16). மேலும் எரே. 23:16-32; வெளி. 18:22,23 ஆகிய வசனங்களை வாசிக்கவும். அவர்களுக்குப் பெரிய மந்தைகள் உண்டு. ஆனால் உண்மையான சில செம்மறி ஆடுகள் மட்டுமே இருக்கின்றன. அவர்களுடைய போதகர்கள் அவர்களுக்கு இருந்தாலும், அவர்களுடைய பெரிய மந்தையிலுள்ள பெயரளவிலான ஆடுகள் ஆரோக்கியமான உபதேசத்தைப் பொறுக்க முடியாத நேரம் வந்துவிட்டது. அவர்கள் தங்களுடைய இச்சைகளுக்கேற்ற போதகர்களைத் தங்க ளுக்குத் திரளாகச் சேர்த்துக் கொண்டு செவித்தின வுள்ளவர்களாகி (உலகத்தின் பாராட்டைப்பெற இச்சை-யுள்ளவர்களாகி) சத்தியத்திற்குச் செவியை விலக்கி கட்டுக்கதைகளுக்குச் சாய்ந்து போகிறார்கள். (2 தீமோ. 4:3,4). பெலனற்ற அவர்களுடைய தேவ பக்தியின் வேஷத்தினால் நாம் வஞ்சிக்கப்படாதபடிக்கு மிகுந்த கவனத்தோடு விழித்திருக்க வேண்டும். "**நீயோ எல்லா-வற்றிலும் மனத்தெளிவுள்ளவனாயிரு, தீங்கநுபவி, சுவிசேஷ-கனுடைய வேலையைச் செய், உன் ஊழியத்தை நிறைவேற்று.**" (2 தீமோ. 4:5).

அதே சமயம் கர்த்தர் வெளிப்படுத்தும் சத்தியத்தின் வெளிச்சத்தினால் பெரிய மற்றும் சிறிய பாபிலோன் இரண்டிலுமுள்ள தப்பறையைப் போதிப்பவர்கள் அனை வரையும் நாம் புறக்கணித்துவிட்டு, முந்தி கொடுக்கப் பட்டிருக்கும் சத்தியங்களை உண்மைத்துவமாய் பற்றிக் கொண்டிருப்பவர்களையும், சத்தியத்தின் போக்கில் தொடர்ந்தேர்ச்சியாய் முன்னேற்றமடைந்து, கர்த்தர் வெளிப்படுத்துவதற்குத்தக்கபடி சத்தியத்தை முன்னேறச் செய்கிறவர்களையும் நம்முடைய போதகர்களாக நாம் ஏற்றுக்கொள்ள வேண்டும். ஏனெனில் சத்தியம் முன்னேற்ற மடைகிறதாயிருக்கிறது. (நீதி. 4:18). சீயோன், மோரியா, அக்ரா, பெசித்தா மற்றும் ஓபேல் மலைகளின் மூலமாக முறையே அடையாளப்படுத்தப்பட்டுள்ள இழந்து போனதைத் திரும்ப கொடுக்கும் காலத்திற்கு முந்தி பிரதிஷ்டை செய்த ஐந்து வகுப்பார்களாகிய சிறுமந்தை, மூப்பரான பாத்திரவான்கள், திரள் கூட்டம், வாலிபரான பாத்திரவான்கள் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் ஆகியோரை பரிசுத்த பெரும்பாதையில் முன்னேறி வரும் தெரிந்தெடுக்கப்படாதோருக்கு உதவி செய்யும் விசேஷித்த கருவிகளாக ஆக்குவார்.

## இயேசுவானவர் தம்முடைய ஆடுகளுக்கு ஆகாரம் கொடுப்பதில் உண்மை உள்ளவராயிருக்கிறார்


உண்மையுள்ள மேய்ப்பராகிய நம்முடைய கர்த்தர் தம்முடைய ஆடுகளுக்கு ஆகாரங்கொடுக்க ஒருபோதும் தவறியதில்லை. "**அவர் நின்றுகொண்டு, கர்த்தருடைய பலத் தோடும் தம்முடைய தேவனாகிய கர்த்தருடைய நாமத்தின் மகத்துவத்தோடும் மேய்ப்பார்: ஆகையால் அவர்கள் நிலைத் திருப்பார்கள்: அவர் இனிப் பூமியின் எல்லைகள்பரியந்தமும் மகிமைப்படுவார்.**"(மீகா 5:4). (மத். 28:20; எபி. 13:5) ஆகிய வசனங்களையும் கூட வாசிக்கவும். அப்போஸ்தலருடைய நாட்களிலும் தம்முடைய ஜனங்களுக்கு "**நிகழ்கால சத்தியத்தைக்**" கொடுத்தார். (2 பேது. 1:12). இரண்டு அறுவடைகளுக்கு இடையேயுள்ள காலத்திலும் அவர்-களுக்குத் தேவையான உதவிகளைக் கொடுத்தார்.

யுகமுடிவின்போது கொடுக்கப்பட்ட பெரிய வெளிச்சத்தோடு ஒப்பிடும்போது அது "**கொஞ்சம் ஒத்தாசை**" என்று (தானி. 11:34) சொல்லப்பட்டுள்ளது. இருப்பினும் சீர்திருத்த காலத்தில் போதுமான வெளிச்சத்தை அவர்களுக்குக் கொடுத்தார். தம்முடைய இரண்டாம் வருகையில் அறுவடையின் அறுப்பு காலத்தின்போது அந்த "**உண்மை–யும், விவேகமுமுள்ள ஊழியக்காரனுடைய**" (மத். 24:45; லூக். 12:42) கைகளினால் "**காலத்துக்கு ஏற்ற போஜனமாக**" மாபெரும் அளவில் சத்தியத்தை வெளிப்படுத்தி தெளிவுப்–படுத்தி தம்முடைய ஜனங்களுக்குக் கொடுத்தார். பின்பு சிறுமந்தையின் அறுப்பும், பொறுக்குதல் வேலையும் முடிந்த பிறகு, எபிபெனியின் தெரிந்தெடுக்கப்பட்டவர்கள், திரள் கூட்டத்தினர், வாலிபரான பாத்திரவான்கள் சார்பாக அவர் தம்முடைய ஆச்சரியமான கிரியையை மகா உபத்திரவ காலத்தின் போது ஆரம்பித்தார். அவர்களுடைய சரியான வளர்ச்சிக்கு மிகவும் அவசியமான சத்தியத்தை எபிபெனி தூதனுடைய கைகளினால் அவர்களுக்குக் கொடுத்தார்.

ரஸல் போதகர் 1916-ல் மரணமடைந்தபோது மேலும் சத்தியம் வெளிப்படுத்தப்படமாட்டாது என்று சிலர் எண்ணினார்கள். ஆகையால் அவர்கள் 1916-க்கு பிறகுள்ள வெளிச்சமாகிய எபிபனி சத்திய வெளிப்பாடுகளுக்கு எதிராக சண்டையிட்டார்கள், இன்னமும் சண்டையிட்டுக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் அந்தந்த காலத்துக்குரியதாக வெளிப்படுத்தப்படும் சத்திய வெளிச்சத்தில் நடக்காமலும், நல்ல மேய்ப்பருடைய சத்தத்தைக் கேட்காமலும் நின்றுவிட்டனர். சிலர் கர்த்தர் அவர்களுக்கு ரஸல் போதகர் மூலம் கொடுத்ததும், அவர்கள் முன்பு அனுபவித்து மகிழ்ந்ததுமான அநேக சத்தியங்களை மறுதலித்துவிட்டனர். அதைப்போலவே ஜாண்சன் போதகர் 1950-ல் மரணமடைந்தபோது மேலும் சத்தியம் வெளிப்படுத்தப்பட மாட்டாது என்று சிலர் எண்ணினார்கள். ஆகவே அவர்களும் 1950-க்குப் பின்பு வெளிப்படுத்தப்பட்ட சத்தியத்திற்கு எதிராக போராடினார்கள். இன்னமும் போராடிக்கொண்டு இருக்கிறார்கள். மேலும் கர்த்தர் கொடுத்துக் கொண்டிருக்கும் வெளிச்சத்திலும் நடக்காமல் நின்றுவிட்டார்கள்.

கர்த்தர் இன்னமும் தம்முடைய ஜனங்களுக்கு சத்திய ஊழியக்காரர்கள் - தீர்க்கதரிசிகள் (அவருடைய ஜனங்களுக்கான பொதுப் பொறுப்பிலுள்ள ஊழியர்–கள்) சுவிசேஷகர்கள், மேய்ப்பர்கள், போதகர்கள் ஆகியோரைக் கொடுத்துக் கொண்டேயிருக்கிறார். இவைகள் விசேஷித்த வகையான ஊழியங்கள். ஆனாலும் விரிவான கருத்தில் கர்த்தருடைய உண்மையான ஊழியக்காரர்கள் அனைவருமே அவருடைய ஸ்தானாபதிகளே; நெருக்கமானவர்களை மரணத்தில் இழந்து தவிப்பவர்–களுக்கு ஆறுதல் சொல்லும் வேலை. துண்டு பிரசுரங்கள் (டிராக்ட்) விநியோகித்தல், வாய் மொழியாகச் சொல்லுதல் அல்லது சாட்சி கூறுதல், ஒடுக்கப்பட்டவர்களுக்கும், வியாதிப்பட்டவர்களுக்கும் கர்த்தருடைய நாமத்தில் ஊழியஞ்செய்தல் போன்ற பல வகையான ஊழியங்கள் உண்டு. குறிப்பாகத் தங்கள் மீது சார்ந்திருப்பவர்களுக்கும் தங்களுக்குமுள்ள தேவைகளுக்கும் மேலும் அதிகமாக வைத்திருப்பவர்கள் யாரும் இந்த உலகத்தின் நன்மைகளுக்கு உக்கிராணக்காரராயிருக்கும் உத்தியோகத்தைப் புறக்கணியாதிருப் போமாக. இதில் உங்களுக்குக் கர்த்தரின் அங்கீகாரம் கிடைக்கும். அப்போஸ்தலராகிய பவுல் எல்லாருக்கும் ஆலோசனையாகக் கூறிய திட்டத்தை நாங்கள் சிபாரிசு செய்கிறோம். மிகவும் ஏழ்மையானவர்களுக்குக் கொடுப்பதற்கு ஒருபோதும் கற்றுக் கொள்ளாதவர்கள் நாம் மிகவும் விரும்புகிற சிலாக்கியங்கள் மற்றும் இன்பங்களில் ஒன்றைச் சரி–யாக மதிக்கத் தவறியதோடு பெரிய ஆசீர்வாதத்தையும் பெறத் தவறி விட்டார்கள். 1 கொரி. 16:2-ம் வசனத்தைக் கவனியுங்கள். "**நான் வந்திருக்கும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல்நாள்–தோறும், தன்தன் வரவுக்குத்தக்கதாக எதையாகிலும் தன்னிடத்திலே சேர்த்துவைக்கக்கடவன்.**"

நம்முடைய பாடத்தின் தலைப்பு வசனத்திலுள்ள நம்முடைய கர்த்தரின் உறுதிமொழி எத்தகைய விலையேறப்பெற்றது. அதாவது, "**நான் அனுப்புகிறவனை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை ஏற்றுக் கொள்ளுகிறான்; என்னை ஏற்றுக் கொள்ளுகிறவன் என்னை அனுப்பினவரை ஏற்றுக் கொள்ளுகிறான்.**" உங்களுக்காக மரித்த உங்களுடைய கர்த்தரும் இரட்சகருமானவரை ஏற்றுக் கொள்வீர்களா? அப்படியானால் அவர் அனுப்புகிறவர்களைக் கண்டறிந்து அவர்களை ஏற்றுக் கொள்ள நிச்சயமுள்ளவர்களாயிருங்கள். சதா காலங்களிலும் உங்களுடைய ஆசீர்வாதங்கள் எல்லாவற்றின் ஊற்றாயிருக்கிற பரம பிதாவை ஏற்றுக் கொள்வீர்களா? அப்படியானால் இயேசுவின் மூலம் உங்களுடைய ஆசீர்வாதங்களுக்காக அவர் அனுப்புகிறவர்களை நிச்சயமாகக் கண்டறிந்து அவர்களை ஏற்றுக் கொள்ள நிச்சயமுள்ளவர்களாயிருங்கள். ***




**Laymen's Home Missionary Movement**

**General Convention of India at Nazareth (Oct-26,27,28-2018)**


**இந்த கன்வென்ஷனில் கலந்து கொண்டு தங்கள் பிரதிஷ்டையை புதுப்பித்துக் கொண்ட, இந்த ஊழியத்தில் பங்குபெற்ற மற்றும் உதவி செய்த சகோதர, சகோதரிகள் யாவரையும் தேவன் ஆசீர்வதிப்பாராக. உபா. 1:31; சங். 65:10–13**

# தேவனுடைய மன்னிப்பின் ஆசீர்வாதம்

(The Blessedness of God’s Forgiveness)

**“எவனுடைய மீறுதல் மன்னிக்கப்பட்டதோ எவனுடைய பாவம் மூடப்பட்டதோ, அவன் பாக்கியவான். எவனுடைய அக்கிரமத்தைக் கர்த்தர் எண்ணாதிருக்கிறாரோ, எவனுடைய ஆவியில் கபடமில்லாதிருக்கிறதோ அவன் பாக்கியவான்.” (சங். 32:1,2)**

தாவீது ராஜா, உரியாவிற்கு எதிரான தன்னுடைய பாவத்திற்கான தேவனுடைய மன்னிப்பை பெருமகிழ்ச்சியோடு ஏற்றுக் கொண்டதை 32-வது சங்கீதத்தில் நாம் அறிந்து கொள்கிறோம். முதலாவது அவருடைய சுயநலமான செயலை நாங்கள் கவனத்திற்கு கொண்டு வருகிறோம்: கர்த்தருடைய ஆசீர்வாதத்தின்கீழ், ஆச்சரியமான, வெற்றிபெற்று பல வருடங்களான பிறகு, அவருடைய ராஜ்யம் பலமுள்ளதாகி, அவருடைய நாமம் மேன்மையடைந்த போது, யுத்தங்களில் அவருடைய தனிப்பட்ட பங்கேற்பு தேவை இல்லாமல் போனபோது, தாவீது ராஜாவின் இருதயம் பூமிக்குரிய இன்பங்களை நோக்கி ஈர்க்கப்பட்டுச் செல்லத் தொடங்கியது. ஆரம்பத்திலிருந்ததை விட கர்த்தருக்காகவும், நியாயப்பிரமாணத்திற்காகவும் கொண்டிருந்த வைராக்கியம் குறைந்து போனது: மிகவும் கொடூரமான பாவங்களுக்குள் ராஜா விழுந்தார்; அது அவர் தேவனுடைய இருதயத்திற்கேற்ற மனுஷனாய் இருந்த அவருடைய ஆரம்ப கால ஜீவியத்தில் அவரால் காண்பிக்கப்பட்ட உயர்ந்த சன்மார்க்க குணங்களுக்கு வேறுபட்டதாக மிகவும் கறைபடிந்ததாகத் தோன்றியது. அவர் எவ்வாறு பத்சேபாளிடம் மயங்கி அவளோடு விபச்சாரம் செய்து, பின்பு தன்னை காத்துக்கொள்வதற்காக, அவளுடைய புருஷனாகிய உரியாவை யுத்தத்தின் முன்னணியில் நிறுத்தச்செய்து, சத்துருக்களால் அவன் கொல்லப்படும்படிச் செய்து, அவனோடுகூட மற்றும் அநேகருடைய ஜீவனும் இழந்து போகச் செய்த, தாவீதின் பாவங்களின் கதையானது, வேதாகமத்தில் மிக நேர்மையான விதமாக, ராஜா செய்த தவறை சிறிதளவிலும்கூட மறைக்க முயற்சிக்காமல் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தக் கணக்கின் தொடர்பாக எந்த மன்னிப்பும் வழங்கப்படவில்லை; இந்த மோசமான குற்றங்களின் முழு பாரமும் ராஜாவினுடைய தலையிலேயே நேரடியாக வைக்கப்படுகிறது. (PT 1941, பக்கம் 161).




32-வது சங்கீதத்தில் கொடுக்கப்பட்டுள்ள யேகோவாவினுடைய மகா இரக்கத்தை நாம் ஆராய்ந்து பார்ப்போமாக. தாவீதின் போதக சங்கீதம் (என்று அதன் தலைப்பில் குறிப்பிடப்பட்டிருப்பதைப் பார்க்கவும்). வசனங்கள் 1, 2: சங்கீதத்தின் முக்கியக் கருத்தையும் கொடுக்கிறது. வசனங்கள் 3, 4 - தாவீது முன்பு அனுபவித்து மகிழ்ந்த தெய்வீக தயவாகிய சூரிய ஒளிக்கும் அவருக்கும் இடையே அவருடைய பாவங்கள் ஒரு மேகமாக வந்திருந்த காலத்தில் ராஜாவுடைய மனத்துயரத்தை பதிவு செய்கிறது.

எல்லா சூழ்நிலைகளின்கீழும் பாவமானது வேதனை தருகிற ஒன்றின் பகுதியாக எப்போதுமே இருந்து கொண்டிருக்கிறது. மிகவும் குறிப்பாக, பாவியானவன் அந்த பாவத்திற்கு குறிப்பிடத்தக்க அளவில் பொறுப்பாளியாகும் போது, அதிகமாக மனச்சாட்சியின் கண்டனத்துக்கு காரணமாகிறது. உண்மையாகவே தாவீது அமைதியாயிருந்து, தனது பாவத்தை ஒத்துக் கொண்டு, மனந்திரும்பி, தன்னுடைய பாவத்திற்கு மன்னிப்பைக் கேட்டும், அதை மறைக்கிறவராக இருந்தபொழுது, நிம்மதியற்ற மனக் கிலேசத்தை அடைந்திருப்பார் என்பதை சந்தேகமின்றி நாம் யூகிக்கலாம். அவருடைய மனது மற்றும் இருதயத்தின் மீதிருந்த கடுமையான பாரம் அவருக்கு ஒரு குறுகிய கால சுகவீனத்தை அநேகமாக கொண்டு வந்திருக்கும். அவருடைய கஷ்டங்களிலெல்லாம் பிரதானமானது, தேவனிடமிருந்து தான் பிரிந்திருந்ததை உணர்ந்ததே ஆகும். தேவனுடைய நியாயப்பிரமாணத்தை அறிவுப்பூர்வமாக மீறினவராக, தேவனுடைய தயவு அப்போது அவரிடத்திலிருந்து நியாயமாகத் திரும்பிப் போனதையும், ஒரு வகையில் நிச்சயமாகத் தேவனால் கைவிடப்பட்டதையும் உணர்ந்தார். ஜீவியத்தின் கடமைகள் எல்லாம் தாங்க முடியாத பாரமாய் மாறி, அதன் இன்பங்களெல்லாம் கிட்டத்தட்ட மரித்து போகும் அளவிற்கு, அவருடைய சரீர ஆரோக்கியத்தை அவருடைய மன வியாகுலம் பாதித்தது.

தேவனிடத்திலிருந்து அவருடைய ஜனங்களைப் பிரிக்கும் எதுவும் அவர்கள் மீது மனச் சோர்வைக் கொண்டு வந்து அதன் விளைவாக, நிச்சயமாகவே, அது அவர்களுடைய ஆரோக்கியத்தைப் பாதிக்கும் என்பது தெய்வீக அரசாங்கத்தின் ஒரு கொள்கையாக இருப்பதை பொதுவாகவே உண்மையில் உணரலாம். மாறாக, “**தேவ சமாதானம்**” நிலை மாறாத கொள்கையாக (பிலி. 4:7) சரீர

ஆரோக்கியத்திற்கும் மகிழ்ச்சிக்கும் நிச்சயமாக அனுகூல மாய் இருக்க வேண்டும் என்பதையும் நாம் நன்கு உணரலாம். தேவனுடைய ஜனங்கள், கர்த்தருக்குள் பலமாக வளரும்போது, ஒரு அளவில் சரீரம் புத்துணர்ச்சி அடைவதை நாம் தொடர்ச்சியாக அவருடைய ஜனங்கள் மத்தியில் காண்கிறோம்.

முதலாவது தாவீதுடைய மனச்சாட்சியின் தாக்கு தலின்கீழ், அவர் அமைதியாயிருந்தார். தன்னை குறித்து வெட்கப்பட்டார். தன்னுடைய நடத்தையின் குற்றத்தைக் குறைத்து தேவனிடத்தில் சொல்ல ஒன்றும் அறியாதிருந்தார். ஆனால் மனம் மற்றும் சரீரம் இரண்டிலும் இந்த பாரம் அதிகமதிகமாக கனமாக வளர்ந்தது. அந்த வருடத்தில் சீக்கிர மாக வயதாகியிருப்பார் என தோன்றுகிறது. அவருடைய "**எலும்புகள் உலர்ந்து போயிற்று:**" அவர் காலத்திற்கு முன்பாகவே பெலவீனமடைந்தார். இரவும் பகலும் தேவனுடைய சிட்சையின் கரம் அவர் மீது பலமாய் இறங்கியது. எனவே அவருடைய இளமைப் புத்துணர்ச்சி, சுறுசுறுப்பு மற்றும் சந்தோஷம் ஆகியவை ஒரு வறட்சியால் உட்கொள்ளப்பட்டு போயின. தெய்வீக கோபத்தின் கண்டனத்தின் கீழிருக்கும் தேவனுடைய பிள்ளையைப் பற்றிய எப்படிப்பட்டதொரு கவித்துவமான சித்திரம் – அது உலகத்தால் புரிந்து கொள்ள முடியாத வகையிலான ஒரு துக்கம்.

ஓர் மனக்கடினமடைந்த குற்றவாளியை விட தாவீதின் நிலைமை மிக தூரமானது என நாங்கள் காண்கிறோம். சோதனையின்கீழ் மிக எளிமையான நீதிப்பிரமாணத்தையும் நட்பையும் அவர் முழுமையாக மீறியிருந்த போதிலும், நீதிக்காகவும் கர்த்தருக்காகவும் ஒழுங்கமைக்கப்பட்டிருந்த அவருடைய இருதயமானது இன்னும் அத்திசையிலேயே ஒழுங்கமைக்கப்பட்டிருந்தது. உண்மையென்னவெனில், மனச்சாட்சியின் பலமான உணர்வுகளை அவர் பெற்றிருந்தார் என்பதும், தெய்வீக கண்டனத்தின் பாரத்தின்கீழ் அவருடைய ஆத்துமா மிகவும் இக்கட்டான நிலையில் இருந்தது என்பதும் இந்த காரியத்தில் நம்பிக்கையூட்டும் அறிகுறிகளாய் இருந்தன.

சங். 32:4, "**சேலா**" என்னும் இசை குறிப்போடு முடிகிறது, அநேகமாக ஒரு சிறிய இடைநிறுத்தம் வேண்டும் என்பதைக் குறிக்கிறது. இசை மாத்திரம் தொடர்ந்து கொண்டிருக்கும். இந்த இடைக்கால இசையின் இயல்பு, தொடர்ச்சியான இசையினால் அநேகமாக ஒவ்வொரு காரியத்திலும், கொடுக்கப்பட்டுள்ள சிந்தனைப் போக்கிற்கு அழுத்தம் கொடுக்கும் விதமாக வித்தியாசப்படுகிறது. இது முன்னதாக கொடுக்கப்பட்ட செய்தியை தியானிப்பதற்கான ஒரு இடைவெளியைக் கொடுப்பதோடு அப்போது நிறைவடைந்ததோடு தொடர்புடையதாயிருக்கும் ஒரு புதிய சிந்தனைப் போக்கிற்கு மாறுவதைச் சுட்டிக்காட்டுகிறது. இருந்தபோதிலும் இந்த தொடர்பு, சில நேரங்களில் ஒரு ஒப்பீடாகவோ அல்லது வேறுபாடாகவோ அல்லது செயல் காரணமும் அதன் விளைவும் பற்றியோ அல்லது ஒரு பொதுவான செய்தியாகவோ பிறகு ஒரு விளக்க விவரம் போன்றவைகளாகவோ இருக்கும். இங்கே வசனம் 5 ஒரு வேறுபாட்டைக் கொடுக்கிறது.

## மனம் வருந்திய தாவீதின் ஜெபத்தை தேவன் கேட்கிறார்

தாவீது ஒரு துணிகரமான பாவியாக இல்லாததால் அவர் இருதயத்தில் பாவத்தை ஏற்றுக் கொண்டு மகிழ்ச்சியடையவில்லை. ஆனால் அதை வெறுத்தார். அதனிமித்த மாக அவர் வருத்தப்பட்டார் – கர்த்தர் மிகவும் இரக்கமாக அவருடைய காரியங்களை வழிநடத்தினார்; எனவே பாடமானது அவருக்கு மேலும் மேலும் கடுமையாக இருந்தது. முடிவில் அதை அவரால் தாங்க முடியாதபடி ஆயிற்று. பிறகு குற்ற உணர்வின் கொப்பளம் முழுமையாக பழுத்த போது, அதை அறுத்து திறப்பதற்கு தீர்க்கத்தரிசியாகிய நாத்தான் மூலமாக தேவன் தம்முடைய செய்தியை அனுப்பினார். அவருடைய கூர்மையான கண்டிப்பும், கடுமையான தீர்ப்பும் ராஜாவினுடைய பயங்கரமான மனவேதனையை உச்சநிலைக்கு கொண்டுவந்து தேவனிடத்திலும் (வசனம் 5) தேசத்திற்கு முன்பாகவும் அறிக்கையிடும் நிலைக்கு அவரைக் கொண்டு வந்தது. அதாவது தெய்வீக மன்னிப்புக்காகவும், தெய்வீக தயவைத் திரும்பபெறுவதற்காகவும் ஜெபம் பண்ணும் நிலைமைக்கு கொண்டு வந்தது; இது இல்லாமல் அவருடைய மனவியாகுலம் தொடர்ந்திருக்கும் என்று அவர் உணர்ந்தார்.

ராஜாவின் ஜெபங்கள் கேட்கப்பட்டது, தேவன் அவரிடத்தில் இரக்கமுள்ளவராயிருந்தார். அவருடைய மீறுதல் மன்னிக்கப்பட்டது. அவருடைய பாவம் மூடப்பட்டது. அவருடைய அக்கிரமம் இனிமேல் அவர் மீது சுமத்தப்படாது. ஏனெனில் அவருடைய இருதயம் மனந்திரும்பியிருந்தது. அதில் யாதொரு கபடமும், வஞ்சகமும், மாய்மாலமும் இல்லை (வசனங்கள் 1,2). அவருடைய மனந்திரும்புதல் உண்மையானதும், முழுமையானதும், நிறைவானதுமாயிருந்தது. சங்கீதக்காரன் தேவனுடைய தயவை தான் திரும்பபெற்றதை பெருமகிழ்ச்சியோடு பாடுகிறார்; சந்தேகமின்றி தெய்வீக வழிகாட்டுதலின் கீழ், இதேவிதமாக பாவத்திற்காக உண்மையான துக்கத்தையும், உண்மையான மனந்திரும்புதலையும் கொண்டிருந்து, அவர்களுடைய குற்றங்களை அறிக்கையிட்டு, அவர்களுடைய விசுவாசத்தை புதிதாக அறிக்கை செய்கிறவர்களுக்கு தேவன் என்ன செய்ய விரும்புகிறார் என்பதற்கான ஒரு மாதிரியாக அல்லது விளக்கப்படமாக இது இருக்கிறது.

தெய்வாதீனமாக, தாவீதுக்கு தேவைப்பட்ட இப்படிப்பட்ட கடினமான ஒழுங்கு நடவடிக்கை தேவனுடைய அருமையான ஜனங்கள் அனைவருக்கும் தேவைப்படுவதில்லை. இருப்பினும், யாராவது பெருங்கேடான பாவத்தில் அகப்படும்போது, நாம் நாடவேண்டிய இரக்கம், தேவனிடத்தில் இன்னும் இருக்கிறது என்னும் ஆறுதலான எண்ணம் எல்லாருக்காகவும் இருக்கிறது. ஆனால் கர்த்தருடைய குணாம்சத்தை பெற்றிருக்கும் எல்லா பிள்ளைகளுக்கும் இன்னும் அதிகமான ஆசீர்வாதங்கள் உண்டு; எனவே அவர்கள் தங்களுடைய இருதயத்திலிருந்து "**என் தேவனே, உமக்குப் பிரியமானதைச் செய்ய விரும்புகிறேன், உமது நியாயப்பிரமாணம் என் உள்ளத்திற்குள் இருக்கிறது**" (சங். 40:8) என்று சொல்ல முடியும். நம்முடைய

மீட்பரும்கூட, "**பட்டபாடுகளினாலே கீழ்ப்படிதலைக் கற்று கொண்டபடியினால்**" (எபி. 5:8) இப்படிப்பட்டவர்களுக்கு பாடங்களும், சிட்சைகளும் தேவைப்படுகிறது. அவரை மகிமைக்கும், கனத்திற்கும், சாவாமைக்கும் உயர்த்திய (எபே. 1:20-22) பிதாவின் மதிப்பீட்டின்படி கீழ்ப்படிதலுக்கான விலை மதிப்பை அவர் கற்றுக்கொண்டபடி, கீழ்ப்படிதலின் விலையை அவர் அனுபவமாகக் கற்றறிந்தார். அவ்வண்ண மாகவே, அவருடைய எல்லா சீஷர்களும் அவருடைய பள்ளியில் கற்றுக்கொள்ள வேண்டும். பிதாவை ஏற்றுக் கொள்ளுகிறவர்கள் ஒவ்வொருவரும் "**நானே நல்ல மேய்ப்பன்... நான் என்னுடையவைகளை அறிந்தும் என்னுடையவைகளால் அறியப்பட்டுமிருக்கிறேன்**" என்ற யோவா. 10:14-ன் "**நல்ல மேய்ப்பனின்,**" மாதிரியாயிருக்கக் கற்றுக் கொள்ள வேண்டும். ஒவ்வொருவரும் பிதாவினுடைய புன்னகை மற்றும் ஐக்கியம், தற்கால மற்றும் நித்திய ஜீவனுக்கான இரக்கமுள்ள வாக்குத்தத்தங்கள் ஆகிய-வற்றின் மதிப்பை அனுபவத்தால் கற்றுக் கொள்ள வேண்டும்.

## தாவீதின் அனுபவங்கள் மற்றவர்களுக்கு உதவிகரமானவை

தாவீதின் அனுபவங்களும், தேவனோடு அவர் ஒப்புரவானதும், தெய்வீக தயவு அவர் சார்பாக நடை-முறைப்படுத்தப்பட்டதுமாகிய இந்த சங்கீதத்தின் பாடங்கள், ஆயிரக்கணக்கான தேவனுடைய பிள்ளைகளிடத்தில், தாவீதுடைய சொந்த தேசத்தில் மட்டுமில்லாமல், தேவனுடைய வார்த்தையை நன்றாகத் தெரிந்திருக்கிற மற்ற எல்லா ஜாதிகளிலும், இனத்திலும், ஜனங்களிலும், பாஷைக்காரரிடத்திலும் குறிப்பாக பாவங்களினாலும் மாம்ச பெலவீனங்களினாலும் வீழ்ந்தவர்களிடத்தில் விசுவாசத்தை தூண்டி, சமாதானத்தையும் இளைப்பாறுதலையையும் கொண்டு வந்தது என்று நிச்சயமாகச் சொல்ல முடியும். கூடுமானால் சிலர் தாவீது போன்றோ அல்லது அதை விட அதிகமாகவோ வேதனையை உணர்கிறார்கள். சிலர் மனிதருடைய பார்வையில் குறைவாகவும் தேவனுடைய பார்வையில் அதிகமாகவும் இந்த வேதனையடைகிறார்கள். இந்த வேதனை பாவியை அவனுடைய கர்த்தரிடத்தில் இருந்து பிரிக்கப் போதுமானதாயிருக்கிறது.

உண்மையாக மனந்திரும்பி, விசுவாசித்து நடந்து, அவருடைய தயவையும் ஐக்கியத்தையும் விரும்புகிற அனை வருக்கும் தேவன் கிருபையாக ஓர் மூடும் வஸ்திரத்தை ஏற்படுத்தியிருக்கிறார். அவர்களுடைய விசுவாசத்தின் காரணமாக, பிரதிஷ்டை செய்வதற்கு முன்பதாகவே, அவர்கள் மீது நீதியை தற்காலிகமாக சாட்டுகிறார். வேதாகம அடையாளக் குறியீடுகளில் நிர்வாணம் பாவத்துக்கும் வெளிப்படுத்தப்பட்ட பாவத் தன்மைக்கும் உருவகமாகப் பயன்படுத்தப்படுகிறது. (வெளி. 16:15; 3:17,18; ஏசா. 47:3; எசே. 16:37; ஓசியா 2:3). விசுவாசியின் இந்த உருவக நிர்வாணமானது, ஒரு வஸ்திரத்தின் மூலமாக அதாவது கிறிஸ்துவின் நீதி (ரோம. 4:5-8) சாட்டுதல் செய்யப்படுவதின் மூலமாக மூடப்படுகிறது, ஏசா. 61:10-ல் நீதியானது, தரிப்பிக்கப்பட்ட அல்லது உடுத்துவிக்கப்பட்ட அல்லது மூடப்பட்ட நிலைமை என்று குறித்துக் காட்டப்பட்டுள்ளது.

"**கர்த்தருக்குள் பூரிப்பாய் மகிழுகிறேன், என் தேவனுக்குள் என் ஆத்துமா களிகூர்ந்திருக்கிறது... அவர் இரட்சிப்பின் வஸ்திரங் களை எனக்கு உடுத்தி, நீதியின் சால்வையை எனக்கு தரித்தார்.**" (யோபு 29:14; வெளி. 19:8; சங். 45:8,13,14).

உண்மையிலேயே. இரக்கமுள்ள தேவனை நாம் பெற்றிருக்கிறோம். பிற சமய கடவுள்கள் அநேக வகைகளில், உணர்ச்சியற்றவர்களாகவும், இரக்கமில்லாதவர்களாகவும் அன்பு, மனதுருக்கம் ஆகிய குணங்களில் குறைவானவர்-களாகவும் இருக்கிறார்கள். வேதாகமத்தின் தேவனானவர் தம்மை அன்போடு நாம் நினைவு கூரும்படி "**நாம் பாவிகளாயிருக்கையில் கிறிஸ்து நமக்காக மரித்ததினாலே**" (ரோம. 5:8) என்று விவரித்துள்ளார். மேலும் தேவன் நீதியுள்ளவரும் மனந்திரும்பி இயேசுவை விசுவாசித்து, அவரிடத்தில் விசுவாசமாயிருந்து கீழ்ப்படிவதின் மூலமாக, அவருடைய தயவுக்கு திரும்புகிற பாவிகளை நீதிமா னாக்குகிற சாத்தியமுள்ளவராகவும் இருக்கிறார்.

தாவீதின் விசுவாசம் அவருக்கு நீதியாக எண்ணப் பட்டது (கலா. 3:6). மேலும் அவர் சார்பாக இயேசுவின் பலி வர இருப்பதின் காரணமாக தேவன் அவரோடு நடவடிக்கை செய்தார். "**உமக்கு பயப்படும்படிக்கு** (பயபக்தியாய் இருக்கும் படிக்கு) **உம்மிடத்தில் மன்னிப்பு உண்டு**" (சங். 130:4) என்று வேதாகமம் தெளிவாக எடுத்துரைக்கிறது. இதுவே, தெய்வீக குணாம்சத்தின் இந்த பண்பே, அதை மதித்துணர்கிறவர்-களிடமிருந்து பயபக்தியைவிட அதிகமாகக் கேட்கிறது. "**அவர் முந்தி நம்மிடத்தில் அன்பு கூர்ந்தபடியால், நாமும் அவரிடத்தில் அன்பு கூருகிறோம்**" (1 யோவா. 4:19) என்று எழுதியிருக்கிறபடி அது அன்பையும் கேட்கிறது. இந்த தேவனுடைய மகா பெரிய அன்பை, நாம் அதிகமதிகமாக மதித்துணரும்போது, நம்முடைய இருதயங்களையும், ஜீவியங்களையும் நெருக்கி ஏவுகிறதும், இழுத்துக் கொள்கிறதும், செல்வாக்கு செலுத்து கிறதுமான வல்லமையாக அது மாறுகிறது.




## பாவங்கள் மன்னிக்கப்பட்டது, ஆயினும் தண்டனை கொடுக்கப்பட்டது

பாவங்கள் மன்னிக்கப்பட்டதையும், மன்னிக்கப்பட்ட பாவங்களைப் பின்தொடர்ந்து சில நேரங்களில் வரும் அடிகளைப் பற்றியும், பல்வேறு தப்பறையான கண்ணோட் டங்கள் ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கின்றன. இந்த பாடம் குறித்த சத்தியத்தை தாவீது ராஜாவின் அனுபவங்கள் விவரிக் கின்றன. அவர் பாவம் செய்த பிற்பாடு, ஒரு காலகட்டத்தில் உண்மை நிகழ்வுகளையும், அவைகளின் தீமையின் கடுமையையும் உணர்ந்ததாகத் தெரிகிறது. பின்பு, விழிப்புணர்வு, தன்னைத் தாழ்த்துதல், நொறுங்குண்ட

இருதயம், கர்த்தருக்கு முன்பாக பாவத்தை ஒப்புக் கொண்டதிலும், கர்த்தருக்கு முன்பாக மீறுதலை அறிக்கையிட்டதிலும் தாழ்மைப்படுதல் ஆகியவைகள் முழு பலத்துடன் வந்தன. பிறகு ஏற்ற வேளையில், தேவனுடைய மன்னிப்பு வந்தது. தான் மன்னிக்கப்பட்டிருக்கிறோம் என்ற உண்மையை கொஞ்சம் கொஞ்சமாக, தாவீது உணர்ந்தார். அதன் பலனாக, ஜீவியத்தின் அனுபவத்தில், சந்தோஷத்தைத் திரும்பவும் பெற்றார். இருந்தபோதிலும், முடிவு இன்னும் வரவில்லை என நாம் காண்கிறோம். சில வருடங்களுக்கு பிறகு, மிக கடுமையானதும், துயரம் நிறைந்ததுமான ஒரு ஒழுக்க நடவடிக்கையை, தாவீது மீதும், அவருடைய குடும்பத்தார் மீதும், தெளிவாகப் புரிந்து கொள்ளும்படி தக்க தண்டனையாக, தேவன் அனுமதித்தார். (2 சாமு. 12:10-12). தன்னுடைய தகப்பனுக்கு எதிரான அப்சலோமின் கலகமும், அதே சம்பவத்தின் ஒரு பகுதியாக தொடர்ந்து வந்த, தொடர்ச்சியான தீமையான அனுபவங்களும், மன்னிக்கப்பட்டிருக்கிற தன்னுடைய மீறுதலின் காரணமாக, தேவனால் வர அனுமதிக்கப்பட்டிருக்கிற ஒரு சிட்சை என்று தாவீதுதாமே உணர்ந்தார். (2 சாமு. 16:11).

இது எவ்வாறு புரிந்து கொள்ளப்பட வேண்டும்? ஒரு பாவம் மன்னிக்கப்பட்ட பின்னும், அதன் கணக்காக எப்படி தண்டனை சுமத்தப்பட முடியும்? இந்த கேள்வியின் மீதுள்ள சரியான சிந்தனை என்னவெனில், பாவம் மற்றும் பாவிக்கு எதிரான தம்முடைய கடுங்கோபத்தை தேவன் நிறுத்திவிட்டு அல்லது கைவிட்டு விட்டு, தயவின் நோக்கில் இருந்து பாவிகளோடு நடவடிக்கை செய்கிறார் என்பதை தெய்வீக மன்னிப்பு குறிக்கிறது. இருப்பினும் நீதி இன்னும் அதைத் தொடர்ந்து பற்றிக் கொண்டிருக்கிறது. அது திருப்திப்படுத்தப் படவேண்டும். நீதி மன்னிப்பை அறியாது. இந்த பாடம் 1 கொரி. 15:34-வசனத்திலும்கூட கொடுக்கப்படுகிறது, "**நீங்கள் பாவஞ் செய்யாமல், நீதிக்கேற்ப விழித்துக் கொண்டு இருங்கள்.**" தேவனுடைய பிரதிஷ்டை செய்த பிள்ளைகளுடைய குணாம்சத்தில் தேவ சாயலை அபிவிருத்தியடையச் செய்யலாம் என்பதற்காக, சோதனைகள், கஷ்டங்கள் மற்றும் மெருகூட்டல்களாகிய இந்த அனுபவங்களை நாம் பெற்றிருக்க வேண்டும் என்பதே அவருடைய சித்தமாய் இருக்கிறது. தன்னுடைய சிருஷ்டிகளுக்கான தேவனுடைய மாபெரும் அன்பை நாம் பார்க்கும் அதே வேளையில், முதன்மையான பாடத்திற்கு உங்கள் கவனத்தை நாங்கள் திருப்புகிறோம்: "**நீதிகேற்ப விழித்து**" இருங்கள் என்று 1 கொரி. 15:34 உண்மையாகவே சுட்டிக்காட்டுகிறது. (ரஸல் போதகரின் பிரசங்கங்கள், பக். 349).

யாரெல்லாம் நீதியின் கொள்கைகளை மீறிக் கொண்டிருக்கிறார்களோ, அவன் ஒரு கிறிஸ்தவனாயிருந்தால், இந்த காரியத்தை ஊக்கத்தோடும், ஜெபத்தோடும் பரீட்சித்து, "**பாவஞ்செய்யாமல், நீதிக்கேற்ப விழித்து**" இருக்க வேண்டும். நீதியே எல்லா குணாம்சத்திற்கும், நேர்மையான எல்லா ஜீவியத்திற்கும், முழு நிறைவான ஆதாரமாயிருக்கிறது. அதுவே தேவனுடைய சிங்காசனத்தின் முழு நிறைவான ஆதாரமாயிருக்கிறது (சங். 89:14). மற்றவர்களோடுள்ள நம்முடைய எல்லா நடைமுறை தொடர்புகளிலும், முதலாவது நீதி, பின்பு அன்பு என்ற சட்டமே ஆட்சிசெய்ய வேண்டும். தேவனே நீதியின் தலைசிறந்த பிரதிநிதி என்று வேதாகமம் எங்கும் போதிக்கிறது!

இந்த காரியத்தை, பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவர்களுக்கு பயன்படுத்தும்போது, "***விசுவாசிகளைப்***" பொறுத்த வரையில், நம்முடைய கர்த்தராகிய இயேசுவின் மரணத்தின் மூலமாக, நீதியானது திருப்தி செய்யப்பட்டிருக்கிறது என நாங்கள் கருத்து கூறுகிறோம். அவருடைய புண்ணியம் தற்காலிகமாக நமக்கு சாட்டப்பட்டிருக்கிறது. நீதியின் கோரிக்கையின் ஒரு பகுதியாக மாத்திரமா இது இருக்கிறது? நம்முடைய எல்லா தவறுகள் அல்லது குறைபாடுகள் அல்லது மனப்பூர்வமில்லாத அவைகளின் அளவுக்குத் தக்கதாக எல்லாவற்றிற்காகவும் அது இருந்தது என நாங்கள் பதிலளிக்கிறோம். ஒரே வார்த்தையில் சொல்வதாக இருந்தால், நம்முடைய மன்னிப்புக்காக, கிறிஸ்துவிலுள்ள தேவனுடைய முன்னேற்பாடு, 1 யோவா. 3:8-ல் "(மனப்பூர்வமாக) **பாவஞ்செய்கிறவன் பிசாசினாலுண்டாயிருக்கிறான்**" என்று நாம் வாசிக்கிறபடி மனப்பூர்வமான பாவங்களை மூடாது, மனப்பூர்வமில்லாத பாவங்களை அது மூடுகிறது; அல்லது பலவீனம் மற்றும் அறியாமையினாலான மற்றும் ஓரளவு மனப்பூர்வமான பாவங்கள் காரியத்தில், மனப்பூர்வமில்லாத எல்லா அம்சங்களை மட்டுமே அது மூடுகிறது. நமது பங்காக தவறின் மனப்பூர்வமான பகுதியின் பொறுப்பை நம் (பிரதிஷ்டை செய்த கிறிஸ்தவர்கள்) மீது விட்டு விடுகிறது.




**பாவம் செய்வதை நிறுத்து**

### தேவன் தம்முடைய ஜனங்களிடம் கேட்பது

- பரிசுத்த ஜீவியம் செய் – 1 பேது. 1:13-16.
- பாவத்தில் ஜீவிப்பதை நிறுத்து – ரோம. 6:1,2
- நீதிக்கேற்ப விழித்திரு, பாவம் செய்யாதே – 1 கொரி. 15:34.
- அவபக்தியையும் லௌகீக இச்சைகளையும் வெறுத்து தெளிந்த புத்தியும், நீதியும், தேவபக்தியுள்ளவர்களாய் இந்த யுகத்தில் ஜீவித்தல். தீத்து 2:11-13.
- பாவம் செய்தால் – மனந்திரும்பு, அறிக்கையிடு, ஜெபி!!

முற்றிலும் மனப்பூர்வமான பாவத்தைக் குறித்து, "**சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொரு பலி இனியிராமல், நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்ப்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும்**" (எபி. 10:26,27) என்று அப்போஸ்தலர் சபைக்கு கூறுகிறார். கிறிஸ்துவில் இருக்கும் மீட்பின் மூலமாக நீதியை பெற்றுக் கொள்வதற்கான தேவனுடைய திட்டத்திற்கும், அவருடைய நீதிக்கும், அவருக்கும் எதிராக அறிவுப்பூர்வமாக எதிர்க்கும் எல்லா கிறிஸ்தவர்களுமே இந்த விரோதிகளாயிருக்கிறார்கள்; இவர்களே கிறிஸ்துவின் விலையேறப்பெற்ற இரத்தத்தை மனப்பூர்வமாக வேண்டுமென்றே காலின் கீழ் மிதிக்கிறவர்கள்; சாத்தானும் மற்றும் சிலரும் தெளிவாக பிரகாசிக்கப்பட்டு வந்த பிறகு வேண்டுமென்றே பாவத்தை தெரிந்து கொள்கின்றனர். (R 5896:1). "**அவர்கள் நித்திய அழிவாகிய தண்டனையை அடைவார்கள்**" (2 தெச. 1:10).

“**அவர் எப்பொழுதும் கடிந்துகொள்ளார்: என்றைக்கும் கோபங்கொண்டிரார்** (கோபத்தை வைத்திருத்தல் அல்லது பிடித்துக் கொண்டிருத்தல்)” [சங். 103:9; (R 1402:6)], “**துன்மார்க்கர் யாவரையும் அழிப்பார்.**” (சங். 145:20). ஆம், நீதி ஜெயம் பெற வேண்டும்!

“**மரணத்திற்கு ஏதுவான பாவம்**” (1 யோவா. 5:16) நீங்கலாக, எல்லா பாவத்திலும், பலவீனம் மற்றும் அறியாமையின் அளவுக்குத்தக்கதாக, தெய்வீக மன்னிப்புக் கான வாய்ப்பு இருக்கிறது. தெய்வீக தயவின்மை, கர்த்தருடைய ஆதரவு இல்லாதிருத்தல் ஆகியவை இனிமேல் தொடராமல், அந்த தனிநபர் திரும்பவும் தேவனுடைய ஐக்கியத்துக்கு திரும்புகிறான் என்ற கருத்தில் மனந்திரும்பிய கர்த்தருடைய ஜனங்களுடைய பாவங்கள் இரக்கமாக மன்னிக்கப்படுகின்றன. இருப்பினும் செய்த தவறு சம்பந்தமான மனப்பூர்வத்தின் அளவுக்குத்தக்கதான ஒரு பொறுப்பு அவனைச் சூழ்ந்திருக்கும். தேவையான சிட்சையின் அடிகளை அவன் பெற்றுகொள்ளச் செய்வதில் கர்த்தர் கவனமாயிருப்பார். இதை ஒரு பழிவாங்குதலாக நாம் நினைக்கக் கூடாது, ஆனால் மாறாக அதனை ஒரு நீதியின் நடவடிக்கையாகவும், பாவத்தின் அளவு கடந்த பாவத் தன்மையையும், அதன் விரும்பத்தகாத தன்மை-யையும், நன்மையானது (எது நீதியோ அதைச் செய்வது) எப்போதுமே அதன் வெகுமதியை கொண்டுவரும் என்பதை-யும் பற்றி கொஞ்சம் கற்றுக் கொள்வதற்காக என்று நினைக்க வேண்டும்.

இந்த சிந்தனைக்கு இசைவாக, தங்களுடைய ஆரம்ப கால வாழ்க்கையின் பாவங்கள் மற்றும் மதியீனத்திற்கான தண்டனையாக சரீர ரீதியாக துன்பப்படுகிறவர்களாய் இருக்கிறபோதிலும், கிறிஸ்து இயேசுவின் மூலமாக தேவனிடத்தில் முழுமையான இசைவிற்கும், தேவனுடைய பிள்ளைகளோடு முழுமையான ஐக்கியத்துக்கும் வந்திருக் கிற அநேக கிறிஸ்தவர்கள் இன்று இருக்கிறார்கள். தேவனுடனான அவர்களுடைய ஐக்கியத்துக்கு தடையாக, பாவமானது அவர்களுக்கு எதிராக வைக்கப்படவில்லை என்ற கருத்தில் அவர்களுடைய பாவங்கள் மன்னிக்கப் பட்டிருக்கின்றன. அது மூடப்படுகிறது, ஆனால் அதனுடைய அடையாளத்தை அவர்களுடைய மாம்சத்தில் விட்டு வைக்கிறது, அதனால் பல்வேறு வழிகளில் வேதனையை ஏற்படுத்துகிறது.

சாவுக்கேதுவான நம்முடைய மாம்சத்தில் இப்போ திருக்கிற பெலவீனங்களும், தழும்புகளும் தொடர்ந்து இருந்து கொண்டிருக்கின்றன. இவைகள் மனுஷீகத்திற் குரியதாயிருப்பினும், கிறிஸ்துவை விசுவாசித்து, தேவனுக் கும் அவருடைய ஊழியத்திற்கும் பிரதிஷ்டை செய்வதின் மூலம் அது நீதியாக எண்ணப்படுகிறது. உயிர்த்தெழுதலில் நமக்கு பூரணமான சரீரங்கள் கொடுக்கப்படும்வரை நாம் நம்முடைய அபூரணமான மனுஷீகத்திலிருந்து விடுவிக்கப் படுவதில்லை. தேவனுடைய பார்வையில் இப்போது மூடப்பட்டு அல்லது மறைக்கப்பட்டிருக்கும் பாவங்கள் அப்போது முற்றிலும் அழிக்கப்படுவதோடு, நாமும் அவைகளை ஒருபோதும் அறியப்போவதுமில்லை. இதுவே அப்.3:19-லுள்ள பரி. பேதுருவின் கருத்தாகக் காணப் படுகிறது. “**ஆனபடியினாலே கர்த்தருடைய சந்நிதானத்திலிருந்து இளைப்பாறுதலின் காலங்கள் வரும்படிக்கும், முன்னே குறிக்கப்பட்ட இயேசுகிறிஸ்துவை அவர் உங்களிடத்தில் அனுப்பும் படிக்கும், உங்கள் பாவங்கள் நிவிர்த்தி செய்யப்படும் பொருட்டு நீங்கள் மனந்திரும்பிக் குணப்படுங்கள்.**” நாம் மேலே கூறியதுபோல நம்முடைய பாவங்கள் கிறிஸ்துவின் நீதியின் வஸ்திரத்தால் மூடப்பட்டு தேவனுடைய ஏற்றகாலத்தில் அவைகள் ஒருபோதும் இல்லாதவாறு முற்றிலுமாக அழிக்கப்பட்டுப்போகும்.

சங். 32:5-ல் தாவீது தன்னுடைய மனந்திரும்புதலின் வழிமுறையையும், அவரது மீறுதலின் பாவம் மன்னிக்கப் பட்ட ஆசீர்வாதத்தின் பலனையும் விவரித்து, சேலாவுடன் கூட முடிக்கிறார். இந்த ஒரு காரியம் அதற்கு முந்தியிருக்கிற வசனத்திற்கு முற்றிலும் மாறுபடுகிறது. அங்கேயோ குற்றமுள்ள மனச்சாட்சியின் பலத்தகரத்தின்கீழ் போராடும் பாவியின் உரத்த சத்தமான புலம்பலை நாம் உணர்கிறோம். இங்கு மாறாக இப்போதே தன்னுடைய ஆத்துமாவை தேவனுக்கு முன்பாக ஊற்றி, தன்னுடைய பாவம் எதையும் மறைக்காமல் அறிக்கை செய்து, தேவனுடைய மன்னிப் பைப் பெற்று, அவருடைய தயவுக்குள்ளாக திரும்பவும் கொண்டுவரப்பட்ட மனந்திரும்பிய பாவியின் ஆனந்த முழக்கத்தை நாம் தெளிவாகக் கேட்கிறோம். இந்த சேலாவானது, விசுவாசத்தின் மூலம் நீதிமானாக்கப்படுதல் மற்றும் தேவனுடைய கிருபையான மன்னிப்பின் மாபெரும் சத்தியத்திற்கு ஆம் என்றும் ஆமென் என்கிறதுமான இசையாயிருக்கிறது.

தனக்குக் கிடைத்த தேவகிருபையை சிந்திக்கும் தாவீது, எல்லா காலங்களிலும் தேவனுடைய ஜனங்கள் எல்லாருக்கும் பொருந்தக்கூடிய ஒரு கோட்பாட்டை பரிசுத்த ஆவியினால் ஏவப்பட்டு பேசுகிறார். **இதற்காகச்** (இதன் காரணமாக - அதாவது தேவனுடைய இரக்கத்தின் காரணமாக) ***சகாயங்கிடைக்கும் காலத்தில்*** (அதாவது அவர்களது இருதயம் உணர்வற்றதாக தீமையின் போக்கில் உறுதிப்படுவதற்கு முன்பாக **பக்தியுள்ளவனெவனும்** (தேவ-பக்தி) **உம்மை நோக்கி விண்ணப்பஞ் செய்வான்**” (வசனம் 6) என்று கூறுகிறார். பக்தியுள்ள இருதயத்தையுடைய - அதாவது தேவனுடைய நீதியான வழியை விரும்புகிற வனாயிருந்த போதிலும், வழியில் இடறி விழுந்த மற்றவர்-களுக்கு உதவியாக இருக்க வேண்டும் என்று தாவீது தனது சொந்த அனுபவங்களை இங்கே ஆலோசனையாகக் கூறுகிறார். உடனடியாக தேவனிடத்தில் ஜெபிக்கவும் - அவரைக் கண்டடையத்தக்க சமயத்தில் அவரைத் தேட வேண்டும் என்றும் தாவீது அப்படிப்பட்டவர்களுக்கு புத்திகூறுகிறார்.

தாவீது தன்னுடைய பாவத்திற்கு மனந்திரும்பும்வரை, ஒவ்வொருநாளும் அதிகமதிகமாக தேவனுடனான ஐக்கியத் திலிருந்து விலக்கப்பட்டு வருவதை தாவீதின் சொந்த அனுபவங்கள் அவருக்கு கற்றுக்கொடுத்ததாகக் காணப் படுகிறது. ஜலப்பிரவாகம் போன்ற உபத்திரவங்கள் அப்படிப் பட்டவனுக்கு நேரிடாமல் இருப்பதற்கும், எதிர்காலத்தில் தேவைப்படும்போது உதவியாக அவருடைய கிருபையையும் இரக்கத்தையும் பெற்றுக் கொள்வதற்கும், சரியானபடி

தேவனிடத்தில் சென்று அறிக்கையிடுவதின்மூலமே அவன் அதிக அளவில் சேதமடையாமல் காக்கப்படுவான் என்பதே அவருடைய புத்திமதியாயிருக்கிறது.

தாவீது தெய்வீக தயவின் சமாதானத்தை கண்டடைந்து, தான் அதில் இளைப்பாறத்தக்க ஒரு மறைவிடத்தை எவ்வாறு பெற முடிந்தது என்று அவரது சொந்த அனுபவங்களுக்கு மீண்டும் திரும்பி வசனம் 7-ல் குறிப்பிடுகிறார். இருப்பினும் நியமிக்கப்பட்டத் தண்டனைகளை எதிர்பார்த்திருக்க அறிந்திருந்தபோதிலும் இப்போது அவரது இருதயம் தேவனுடன் ஐக்கியத்தில் இருப்பதையும் அவருடைய பாவத்தின் விளைவாக அவர் தம்முடைய உபத்திரவத்தில் இருந்தபோதும், தேவனுடைய சமுகம் அவரோடிருந்து அந்த தண்டனைகளிலும் துன்பத்திலும் அவரைப் பாதுகாக்கும் என்பதையும் தாவீது ராஜாவால் அறிந்துணர முடிந்தது.

"**நீர் எனக்கு மறைவிடமாயிருக்கிறீர்: என்னை நீர் இக்கட்டுக்கு விலக்கிக்காத்து, இரட்சணியப் பாடல்கள் என்னைச் சூழ்ந்துகொள்ளும்படி செய்வீர்** (சேலா)" என்று தாவீது இங்கேயும்கூட சுவிசேஷ யுகத்தின் முடிவிலுள்ள தேவனுடைய ஜனங்களுக்காக தீர்க்கதரிசனமாக பேசியதாகக் காணப்படுகிறது. இதே போல் முற்காலத்தில் மூன்று எபிரெய ஊழியக்காரர்களை அதிகமாய்ச் சூடாக்கப்பட்ட அக்கினி சூளைக்குள் தூக்கி வீசியவர்கள் மரணத்திற்கு ஏதுவாக தண்டிக்கப்பட்டு அக்கினி ஜுவாலையினால் கொல்லப்பட்ட போதிலும் அந்த மூவரும் எவ்வித சேதமும் அடையாதிருந்தார்கள். வசனம் 7-ன் முடிவிலும் மற்றொரு சேலா இருக்கிறது. இங்கு மீண்டும் சிந்தனைப் போக்கில் ஒரு முடிவு அல்லது மாற்றம் வருகிறது.

இந்த சங்கீதத்தின் கடைசி நான்கு வசனங்கள் "**நீதிமான்களே**" (வசனம் 11) என்று தேவன் தம்முடைய ஜனங்களிடத்தில் பேசுவதை குறித்துக் காட்டுகிறது. இந்த சந்தர்ப்பத்தில் நீதிமான்களே என்பதன் கருத்தானது முற்றிலும் தவறே செய்யாதவர்களை அடையாளப்படுத்துகிறது என்று புரிந்து கொள்ளக் கூடாது. ஏனெனில் "**அந்தப்படியே: நீதிமான் ஒருவனாகிலும் இல்லை**" (ரோம. 3:10). மாறாக "**அப்படியே ஆபிரகாம் தேவனை விசுவாசித்தான். அது அவனுக்கு நீதியாக எண்ணப்பட்டது**" (கலா. 3:6) என்ற விதமாக அவர்களுடைய இருதயத்தின் விசுவாசமுள்ள மனப்பான்மை மற்றும், தேவ சித்தத்திற்கு கீழ்ப்படிய விரும்புவதின் காரணமாக தேவனால் நீதிமான்களாக எண்ணப்படுகிறார்கள்.

## தேவனுடைய கண்ணால் நடத்தப்படுதல்

இப்படிப்பட்ட நீதிமான்களிடத்தில் தேவன் "**நான் உனக்குப் போதித்து, நீ நடக்கவேண்டிய வழியை உனக்குக் காட்டுவேன்: உன் மேல் என் கண்ணை வைத்து, உனக்கு ஆலோசனை சொல்லுவேன்**" (வசனம் 8) என்று கூறுகிறார். அல்லது இது "**நான் உனக்கு கற்பித்து நீ நடக்க வேண்டிய வழியை உனக்கு போதிப்பேன். என் கண்ணால் உன்னை வழிநடத்துவேன்**" என்று நேரடியான முறையில் மொழிபெயர்க்கப்பட்டிருக்க வேண்டும். இந்த மொழிபெயர்ப்பு A.V அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பைவிட அதிக பொருத்தமான வரிசை முறை கருத்தைக் கொடுக்கிறது. அதாவது தேவன் தம்முடைய ஜனங்களுக்கு போதித்தல், வழிநடத்துதல், ஆலோசனை வழங்குதல் ஆகிய மூன்று காரியங்களையும் செய்வதாக வாக்குத்தத்தம் செய்திருப்பதை அறிவிக்கிறது.




தேவன் தம்முடைய ஜனங்கள் தமது திட்டத்தின் பல்வேறு சிறப்பம்சங்களை அறிந்துகொள்ளவும், புரிந்துகொள்ளவும் செய்வதுமட்டுமல்லாது, அவர்கள் "**தேறினவர்களாகவும் எந்த நற்கிரியையுஞ் செய்யத் தகுதியுள்ளவர்களாகவும் இருக்கும்படியாகச்**" செய்வதோடு (2 தீமோ. 3:17). அவர்கள் நடக்க வேண்டிய வழியில் எவ்விதம் நடக்க வேண்டும், அதில் இடைவிடாமல் எவ்வாறு, முன்னேறிச் செல்ல வேண்டும் என்பது போன்றவைகளையும்கூட அவர்களுக்கு அவர் போதிக்கிறார் (ஏசா. 30:21). தேவன் தமது சந்தோஷமும், சமாதானமும் நிறைந்த (நீதி. 3:17, 4:11) செம்மையானதும், உத்தமமானதுமான அவருடைய வழியில் (2 சாமு. 22:31; ஓசி. 14:9) அவர்கள் நடப்பதற்காக. நம்முடைய ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து மற்றும், பாதுகாவலரான தூதர்கள் மேலும் மற்ற தூதுவர்கள் மூலமாகவும் (சங். 34:7; 91:9-11) போதித்து அவர்களை வழிநடத்துகிறார். (சங். 23:1-3; 37:23).

மேலும் தேவன் அவர்களுக்கு ஆலோசனைகளைக் கொடுக்கிறார். (சங். 73:24; எரே. 32:19). மனித ஆலோசனைக்காரர்களைப் போல் அவர் தவறு செய்வதில்லை. அவருடைய ஆலோசனை நிச்சயமானது (சங். 33:11; நீதி. 19:21). கண் ஞானத்திற்கு அடையாளமாயிருக்கிறது. தேவன் இயேசுவை நீதிமான்களுக்கு அவருடைய ஞானமாகும்படிச் (கண்) செய்கிறார். இயேசுவும் தொடர்ந்து அவர்களுக்கு ஆலோசனை கூறுவதற்கு வேதாகமத்தைப் பயன்படுத்தி அவர்களின் பாதைக்கு வெளிச்சத்தைப் பிரகாசிக்கச் செய்கிறார். (சங். 119:105).

நீதிமான்கள் தங்களது அனுதின அனுபவங்களுக்கு மத்தியில் வசனம் 8-லுள்ள தேவனுடைய விலையேறப்பட்ட வாக்குத்தத்தத்தை தங்கள் மனதில் வைத்திருப்பதினால் பாக்கியவான்களாயிருக்கிறார்கள். மேலும் "**வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவராயிருக்கிறாரே**" (எபி. 10:23). அவருடைய வாக்குத்தத்தங்களில் ஒன்றும் தவறுவதில்லை. பூமியில் உருவாகி எழும்பும் மேகங்கள் எதுவும் நம்முடைய பிதாவின் கண்களிலிருந்து நம்மை மறைக்காதபடி விழிப்புடன் கவனித்து, "**தேவனுடைய அன்பிலே உங்களைக் காத்துக்கொண்டு, நித்திய ஜீவனுக்கேதுவாக நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினுடைய இரக்கத்தைப் பெறக் காத்திருங்கள்.**" (யூதா 21). இவ்வாறு செய்கிறதினால் அவருடைய ஊழியக்காரர்களாக நமது மனுஷீகம்

அகப்படும்படி அவர் அனுமதிப்பது எதுவாயிருந்தாலும் தேவன் எப்போதும் அவருடைய கண்ணால் நம்மை வழிநடத்துவார் என்றும், அவருடைய கிருபை நம்மைவிட்டு ஒழிந்து போவதும் நம்மைவிட்டு விலகுவதும், நம்மைக் கைவிடுவதும் இல்லை என்றும் நாம் உறுதியாயிருக்கலாம். இரட்சிப்பின் பாடல்கள் நம்மைச் சூழ்ந்து கொள்ளும்படிச் செய்வார். நமது பரமபிதாவோடுகூட பிரதிஷ்டை செய்த தேவனுடைய பிள்ளையானவன் எப்பேற்பட்ட ஒரு விலையேறப்பட்ட உறவை உரிமையாகப் பெற்றுக் கொள்ள அனுமதிக்கப்படுகிறான்!

## புத்தியில்லாத குதிரையைப்போலவும் கோவேறு கழுதையைப் போலவும் இருக்க வேண்டாம்

"**புத்தியில்லாத குதிரையைப் போலவும், கோவேறு கழுதையைப் போலவும் இருக்க வேண்டாம்**" என்ற 9-வது வசனமானது வசனம் 8-க்கு நேரெதிரான தெளிவான கருத்தைக் கொடுக்கிறது. தேவனுடைய வாயால் போதிக்கப் பட்டு, அவருடைய புத்திமதிகளைப் பெற்றுக்கொண்டு, அவருடைய கண்ணால் வழி நடத்தப்படுகிறவர்கள், பலவந்தமாகத் திருப்பி வழிநடத்தப்பட வேண்டிய கீழ்ப்படியாத குதிரையைப் போலவும், அடங்காத கோவேறு கழுதையைப் போலவும் இருக்க மாட்டார்கள். அவர்களுடைய ஆசீர்வாதம் மற்றும் மகிழ்ச்சிக்காக பிதாவானவர் அவர்களுடன் ஈடுபாடு செய்ய க்கூடிய அளவில் அவர்களுடைய இருதயங்கள் பிதாவினிடத்தில் மிகவும் இணக்கமாக இருக்கும்.

ஆயிரவருட யுகத்தின் போது பலவந்தமாகத் திருப்பி வழிநடத்தப்பட வேண்டிய அடக்கப்படாத குதிரை மற்றும் கீழ்ப்படியாத கோவேறு கழுதையிடம் நடவடிக்கை செய்வது போல, மனுக்குலத்தாரை கர்த்தர் கையாளுவார். அவர் "**ஜாதிகளை இருப்புக்கோலால் ஆளுவார்.**" (வெளி. 2:27; 12:5; 19:15). வாரினாலும், கடிவாளத்தினாலும் அவர்கள் கட்டுப்படுத்தப்படுவார்கள். ஆயினும் இழந்துபோனதைத் திரும்பப் பெறும் வகுப்பாரும்கூட இந்த நிலைமையைவிட உயர்வாக முன்னேற முடியும். இல்லாவிட்டால் அவர்கள் தங்களது நியாயத்தீர்ப்பு நாளின் முடிவில் நித்திய ஜீவனுக்கு தகுதியுள்ளவர்களாக ஒருபோதும் இருக்க மாட்டார்கள். இங்கே சம்பந்தப்பட்ட கோட்பாட்டைக் காண்கிறவன், தேவனுடைய அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ள விரும்பி னால், மனப்பூர்வமாக அவருடைய கண்ணால் வழிநடத்தப் பட்டு பிதாவுக்கும் அவருடைய நீதியான காரியத்துக்கும் மகிழ்ச்சியோடு ஊழியஞ் செய்வதற்குரிய பாடத்தைக் கற்றுக்கொள்ள வேண்டும்.

"**துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு: கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்து கொள்ளும்**" என்று வசனம் 10 நமக்கு கூறுகிறது. இங்கே நாம் ஏன் பாவத்திற்கு விலகி ஓட வேண்டும். பரம பிதாவிடத்திலும் அவருடைய நடத்துதலிலும் நம்பிக்கைக் கொண்டிருக்க வேண்டும் என்பதற்கு இரண்டு கூடுதலான காரணங்கள் இருக்கின்றன. ஒன்றுக்கொன்று வேறுபட்ட இரண்டு விதமாக சிந்திக்கும் நிலையிலிருந்து அவைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன.

**(1) இழப்பு:** "**துன்மார்க்கனுக்கு அநேக வேதனைகளுண்டு**" அவர்களது இழப்புகள் ஏராளமாயிருக்கிறது; அவர்களது துக்கங்களும், உபத்திரவங்களும், தண்டனைகளும் அநேகமாயும், மிகவும் கடுமையாயும் இருக்கின்றன. தாவீது பாவத்தை செய்வது தேவனுடைய உறவிலிருந்து பிரிந்து தனது பாவத்தை மறைக்க முயற்சி செய்த காலம் வரையுள்ள தனது துயரமான அனுபவத்தினால் இதை நிரூபித்தார். (வசனங்கள் 3,4). அவர் தன்னுடைய தன்னிச்சையான போக்கிலிருந்து மனந்திரும்பாமல் அதிலேயே தொடர்ந்து முன்னேறியிருந்திருப்பாரேயாகில், அவர் தன்னுடைய மூப்பரான பாத்திரவானாகும் தகுதியை யும், இறுதியாக (ஆயிரவருட யுகத்தில்) ஜீவனையும்கூட இழந்திருப்பார்.

**(2) ஆதாயம்:** "**கர்த்தரை நம்பியிருக்கிறவனையோ கிருபை சூழ்ந்துகொள்ளும்.**" தேவனிடத்தில் நம்பிக்கையாயிருப் பவர்களுக்கு வேதனைகளாகக் காணப்படுகிற அனைத்தும் குறைவான தேவபக்தியுடைய அவர்களுடைய அயலாரைப் போல வெளித்தோற்றத்தில் பக்தியுடைய அவ்வளவு அதிகமான வேதனைகள் உண்டு. ஆயினும் தேவனுடைய வாக்குத்தத்தம் தவறாதது - அவருடைய கிருபை அவர்-களுக்குப் போதுமானது. உபத்திரவம் பொறுமையையும், பொறுமை அனுபவத்தையும், (பரீட்சையையும்) அனுபவம் (experience) நம்பிக்கையையும் உண்டாக்குகிறதென்று அறிந்து, உபத்திரவங்களில் மிகுந்த சந்தோஷமாயிருக் கிறவர்களுடைய இருதயங்களில் தேவ அன்பு ஊற்றப் பட்டிருக்கிறபடியால் அந்த நம்பிக்கை அவர்களை வெட்கப் படுத்தாது (ரோம. 5:3-5) என்றும், "**சகலமும் நன்மைக் கேதுவாகவே நடக்கிறது**" என்றும் உறுதியான நிச்சயத்தோடு அவர்கள் இளைப்பாறலாம்.




தேவனிடத்தில் நம்பிக்கை-யாயிருப்பதற்கு அநியாயத்தை விட்டு விலக வேண்டும் என்பதை குறிப்பாகச் சுட்டிக் காட்டி அதனை அவசியமான தாக்குகிறது. பாவத்திலிருந்தும், தப்பறையிலிருந்தும் திரும்பி மனந்திருந்திய ஒருவன் (தொடர்ச்சியாக, அனுதினமும், ஒவ்வொறு மணித்துளியும்) தேவனுடைய இரக்கம் எப்போதும் அவனைச் சூழ்ந்திருப்பதைக் காண்கிறான். ஆகையால் இரட்சிப்பின் சந்தோஷங்களை திரும்பப் பெற்றுக் கொண்ட தாவீது மனந்திரும்புதலின் தீர்க்கமான விசுவாசத்தைக் கூறுகிறார். "**நீதிமான்களே, கர்த்தருக்குள் மகிழ்ந்து களிகூருங்கள், செம்மையான இருதயமுள்ள வர்களே, நீங்கள் எல்லாரும் ஆனந்த முழுக்கமிடுங்கள்**" (வசனம் 11). குற்றத்திற்காக ஆழமாக மனம் வருந்துவதே ஆனந்தத்தின் உயரத்தை அளக்கிறது; மன்னிப்பிற்காக தாழ்மையுடன் அழுவது ஆரவாரமான ஆனந்த பாடல் களோடு முடியும்.

தேவன் தம்முடைய மனந்திரும்பிய விசுவாசமுள்ள ஊழியக்காரர்களுக்கு இரட்சிப்பின் சந்தோஷங்களைத் திரும்பக் கொடுத்து தாம் நொறுக்கின எலும்புகள்

களிகூரும்படிச் செய்வாரேயானால் (சங். 51:8); அவனில் சுத்த இருதயத்தை சிருஷ்டித்து நிலைவரமான ஆவியை அவனில் புதுப்பிப்பாரேயானால் (சங். 51:10); அப்பொழுது அவருக்குப் பிரியமானவர்கள் மீது யார் எதையாவது குற்றப்படுத்த முடியும்? தேவன் இலவசமாக மன்னித்தது போலவே அவருடைய ஜனங்கள் அனைவரும் மன்னிக்கப்பட வேண்டும். நாமும் தாவீதை மூப்பராகிய பாத்திரவான்களில் ஒருவராக, நம்முடைய அன்புக்கும், நம்முடைய நம்பிக்கைக்கும் பாத்திரவானாகவும், அவருடைய குணாம்சத்தை அலங்கரித்த அநேக கிருபைகளை நாம் பிரதிபலிப்பதற்கு மேன்மை பொருந்திய முன் மாதிரியாகவும் ஏற்றுக் கொள்வதில் களிகூர்வோமாக. மேலும் அவர் தன்மீதே வெற்றி பெற்றதைவிட வேறு எந்த தகுந்த உதாரணத்தையும் அவர் நமக்குக் கொடுக்க இயலாது. முக்கியமாக இஸ்ரயேலின் ராஜாவாக அவரது உயர்த்தப்பட்ட ஸ்தானத்தையும், தேசத்திற்கு முன்பாக அவரது மேன்மையையும் கருதுகையில், மிகவும் அவமான கரமான குற்றங்களால் அவர் குற்றவாளியாக இருந்தபோது, அதனை ஒப்புக்கொள்வது அவமானப்படுத்துவதாக இருப்பதோடு, அதன் பலனாக மொத்த தேசத்தினிட மிருந்தும் மதிப்பையும், நம்பிக்கையையும் மேலும் சந்தேகமின்றி உயர்வாக மதித்து பல வருடங்களாக அவர் மிகவும் சிறப்பாகக் கட்டிகாத்த மரியாதையையும் இழக்க நேரிடும் என்பதையும் அவமானத்தின் இயல்பாக இருக்க வேண்டிய கூர்மையான உணர்ச்சி அவருடைய நிதானமான புலன்களிடத்தில் மறுபடியும் கொண்டு வரப்படும்போதும் அவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் அவர் எதிர் பார்த்திருக்க வேண்டும். இந்த காரியங்கள் எல்லா வற்றையும் நாம் ஆராயும்போது, தன்னைத் தாழ்த்தி மனந்திரும்பியதால் தன்மீது தாவீது அடைந்த வெற்றி வரலாற்று சாதனைகளின் பக்கங்களில் மிகச் சிறந்ததும், மிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக விளங்குகிறது. அவருடைய நடத்தையானது கர்த்தருடைய நீதியான வழிகளை பின்பற்றுவதிலிருந்து ஒரு குறிப்பிட்ட எல்லை அல்லது அளவு விலகுவதை தெளிவாக உணர்கிற ஒவ்வொரு தேவனுடைய பிள்ளைக்கும் பரிந்துரைக்கப்பட வேண்டிய ஒன்றாகும்.

துன்மார்க்கருக்கு அவர்களது வேதனைகள் உண்டு, மாறாக கர்த்தருடைய ஜனங்களோ இவர்கள் மத்தியில் எண்ணப்படமாட்டார்கள். ஏனெனில் தேவனுடைய இரக்கம் அவர்களோடு இருக்கும். அவர்களுடைய ஆத்துமாக்கள் புதுப்பிக்கப்பட்டு பழைய நிலைக்கு கொண்டுவரப்படும். ஆகையால் இந்த வகுப்பார் தேவனுடைய இரக்கத்தினால் நீதிமான்களாக எண்ணப்படுவார்கள். அதாவது அவர்கள் தங்களில் நீதிமான்களாக இருப்பார்கள் என்பதினால் அல்ல, ஆனால், கிறிஸ்துவுக்குள் தெய்வீக முன்னேற்பாட்டின் மூலம் நீதிமான்களாக எண்ணப்படுவார்கள். இவர்கள் தங்கள் நிமித்தம் மகிழ்ச்சியாய் இருக்க முடியாவிட்டாலும், “**கர்த்தருக்குள் மகிழ்ச்சியாய்**” இருக்கலாம். ஏனெனில் மாம்சத்தின்படி இவர்கள் முற்றிலும் பெலவீன மாகவும், பாவம் செய்யக்கூடிய இயல்புடன் இருந்தாலும், இருதயத்தில் செம்மையானவர்கள் நம்மில் அன்பு கூர்ந்து, நம்மை தமது விலையேறப்பட்ட இரத்தத்தினால் கிரயம் கொண்டவரின் மூலம் வெற்றி பெற்றவர்களாக கொண்டுவரப்பட முடியும். நம்முடைய இரட்சகராயிருக்கிற தேவனும், நம்முடைய நம்பிக்கையாயிருக்கிற கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் நீதியையும், அபரிமிதமான தெய்வீக இரக்கத்தையும், அறிந்துணர்ந்திருக்கிறபடியால் அவர்களனைவரும் ஆனந்த முழக்கமிடுவார்களாக. (1 தீமோ. 1:1). ***




# செம்மறியாடு வகுப்பாரிலுள்ள சில வித்தியாசங்கள்

Some differences in the sheep class

*“ஆரோனின் சகோதரியாகிய மிரியாம் என்னும் தீர்க்கதரிசியானவளும் தன் கையிலே தம்புரை எடுத்துக் கொண்டாள்: சகல ஸ்திரீகளும் தம்புருகளோடும் நடனத்தோடும் அவளுக்குப் பின்னே புறப்பட்டுப் போனார்கள்” யாத். 15:20 (NKJV).*

சகோதரர் ஜாண்சன் இந்த பொருத்தமான சொற்றொடரைக் கூறியிருக்கிறார்; “**நித்திய ஜீவனுக்கு பாத்திரவான்களாக காணப்படுகிற எல்லா மனிதர்களும் இது முதற்கொண்டு சமமாய் இருப்பார்கள்,**” (மத். 25:34; வெளி. 21:24). இந்த வாக்கியத்தை அதினுடைய சந்தர்ப்ப சூழ்நிலைக்கு வெளியே எடுத்துக் கொண்டு பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் ஆயிர வருட யுகத்திற்குப் பிந்தைய பூமியில் மற்றவர்களைவிட எந்த கருத்திலும் உயர்ந்தவர்களாக இருக்க முடியாது என்று நிரூபிக்க சில கொழித்தல்காரர்கள் முயற்சி செய்து வருகிறார்கள். (PT 1978, p 47; E.Vol.4, p 332).

ஜாண்சன் போதகர் தமது அறிக்கையின் மூலமாக ஆயிரவருட யுகத்திற்குப் பின்பு எல்லா மனிதர்களும் எல்லா வகையிலும் சமமாக இருப்பார்கள் என்று அர்த்தப் படுத்தவில்லை என நாம் காணப்போகிறபடியால் இது ஒரு ஆதாரமற்ற, தவறான முடிவாக இருக்கிறது. ‘கொஞ்ச காலப்’ பரீட்சைக்கு பின்பு இயேசு தேவனுடைய முதன்மை பிரதிநிதியாக பூமிக்குரிய ஆளுகையை செம்மறியாடு வகுப்பாருக்கு ஒப்படைத்து விடுவார். மனுகுலத்திற்காக ஆயத்தம் செய்யப்பட்டிருந்த அந்த ராஜ்யத்தைத்தான் ஆதாம் தனக்கும் தன்னுடைய சந்ததிக்கும் இல்லாதவாறு இழந்துவிட்டார். (மத். 25:34). செம்மறியாடு வகுப்பார் அப்போது “**பூமியின் ராஜாக்களாக**” இருப்பார்கள் (வெளி. 21:24), ஆனால் அவர்கள் அனைவரும் எல்லா வகையிலும் சமமாக இருப்பார்கள் என்று இது நிரூபிக்கவில்லை. எல்லா ராஜாக்களும் எல்லா வகையிலும் சமமாக

இருப்பதில்லை, சில வழிகளில் கணிசமாக வேறு-படுகிறார்கள்.

"**இராஜாக்கள்**" என்று சொல்லப்பட்டிருக்கிற சிறுமந்தையானது "**பூமியிலே** (பூமியின் மீது) **அரசாளுவார்கள்**" (வெளி. 5:9,10; 20:4,6). அவர்களில் அனைவரும் சமமாக இருப்பார்கள், அதாவது அனைவரும் தெய்வீக சுபாவத்தை பெற்றவர்களாய் இருப்பார்கள் என்ற அர்த்தத்திலாகும். ஆனால் இது அவர்களை, தெய்வீக சுபாவத்தைப் பெற்றிருக்கும் மற்றவர்களோடு - அதாவது தேவனுக்கும், இயேசுவுக்கும் அல்லது ஒருவர் மற்றொருவருக்கும் எல்லா வகையிலும் சமமானவர்களாக ஆக்காது. "**மகிமையிலே நட்சத்திரத்துக்கு நட்சத்திரம் விசேஷித்திருக்கிறது, மரித்தோரின் உயிர்த்தெழுதலும் அப்படியே இருக்கும்**" என்றது போல சிறுமந்தை அங்கத்தினர்கள் ஒருவருக்கொருவர் வேறுபடுவார்கள் என்று மற்ற வழிகளிலும் நாம் அறிந்திருக்கிறோம். (1 கொரி. 15:41,42; பெரேயன் விளக்கங்களை பார்க்கவும்). அவர்களில் சிலர் மற்றவர்களைப் பார்க்கிலும் உயர்ந்த குணாம்சங்களையும் மற்றும் ஊழியத்தையும் பெற்றிருப்பார்கள்.

நம்முடைய கர்த்தர், தாலந்துகள் மற்றும் ராத்தல்கள் பற்றி உவமைகளில் எல்லா சிறுமந்தை அங்கங்களும் அவர்களுடைய வெகுமதிகளிலும், உத்தியோகத்திலும் கனத்திலும் மற்றும் மகிமையிலும் சமமாக இல்லை என்று காட்டுகிறார் (SITS.6,pp.419, 725). மேலும் மத். 20:23, 26,27; மாற். 10:40,43,44-ம் அவர் சிறுமந்தைக் கான வெகுமதியிலும், உத்தியோகத்திலும், கனத்திலும் மற்றும் மகிமையிலும் உள்ள வித்தியாசங் களைக் காட்டுகிறார்.

மேலும் மூப்பரான பாத்திரவான்கள் அனைவரும், ஆயிரவருட யுகத்திற்கு பிறகு ஆவிக்குரிய சுபாவத்தைப் பெற்றிருப்பார்கள் என்பதில் அனைவரும் சமமாக இருந்தாலும், ஆனால் அனைவரும் வெகுமதியிலும், உத்தியோகத்திலும், கனத்திலும், மகிமையிலும் மற்றும் பிற வகையிலும் சமமாக இருக்கமாட்டார்கள்; அடையாளத்திலுள்ள கோகாத்திய லேவியர்களும்கூட ஒவ்வொரு வகையிலும் அனைவரும் சமமாக இல்லை. அதே வகையில் நிறைவேறுதலான மெராரியரும், கெர்சோனியர்களுமாகிய திரள்கூட்ட வகுப்பாருக்கும், வாலிபரான பாத்திரவான்-களுக்கும் அவர்கள் ஆவி ஜீவிகளாக ஆகும் போது இது உண்மையாயிருக்கும். "புதிய வானங்களில்" "இராஜாக்களும்" அதிபதிகளின் மூன்று கூட்டத்தார்களுமாயிருக்கும் இந்த நான்கு தெரிந்தெடுக்கப்பட்ட வகுப்பார்கள் அனைவரும் ஒவ்வொரு வகையிலும் சமமாக இருப்பதில்லை என்று வேதவாக்கியங்கள் சாட்சி கூறுகின்றன.

எனவே "புதிய பூமியில்" அனைத்து "இராஜாக்களும்" சமமாக இருப்பார்கள், அதாவது எல்லாரும் பூரண மனித சுபாவத்தையும், பூமியின் ஆட்சியில் ஒரு பங்கையும் (மீகா 4:4) பெற்றிருப்பார்கள் என்பது இதன் கருத்தாகும்; ஆனால் மற்ற ஒவ்வொரு வகையிலும் அல்ல. பரலோக வகுப்பார்களைப்போல அவர்கள் குணத்திலும், உத்தியோகத்திலும், கனத்திலும், மகிமையிலும், ஊழியம் போன்றவற்றிலும் வித்தியாசங்களைப் பெற்றிருப்பார்கள். பாவம், ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கும்போது வளர்ச்சியடைந்ததினால், யூதர்கள் மற்றும் புறஜாதிகள் இருவரையும் உள்ளடக்கிய பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் ஒரு வகுப்பாராக பூமியின் மீது மற்றவர்களைவிட மிகவும் நேர்த்தியான குணாம்சங்களைப் பெற்றிருப்பார்கள். ஆகையால் அவர்கள் பூமியிலுள்ளவர்கள் மத்தியில் உயர்ந்த வகுப்பாராக இருப்பார்கள். மேலும் தெய்வீக குணவிசேடங்கள் அவர்களுக்கு உத்தியோகத்திலும், கனத்திலும், மகிமையிலும் ஊழியத்திலும் ஏற்ற வகையில் மற்றவர்களைவிட அதிகமாக வெகுமதியளிக்கும். (பூரண-மாக இருப்பவர்கள், இனிமேல் பொறாமை கொள்வதில்லை, ஆனால் அவர்களை மதித்து கனப்படுத்துவார்கள்). அவர்கள் உயர்வான கனத்திலும், அன்பிலும் மற்றும் நித்திய நினைவுகூருதலிலும் வைக்கப்பட்டிருப்பார்கள். (சங். 112:6; ஒப்பிடுக. SITS.1, p. 291, அடிபகுதியுடன் ஒப்பிடுக; PT' 73, p. 30 அடிப்பகுதி).

நாங்கள் இப்போது நம்முடைய வேத வசனத்திலிருந்து பொருத்தமான சிந்தனைகளை கவனத்துக்கு கொண்டுவருகிறோம். மிரியாம் மூலமாக அடையாளப் படுத்தப்பட்டவர்கள் (குறிப்பாக பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் உட்பட) இழந்து போனதைத் திரும்பப் பெறுகிற மற்றவர்களைவிட ஊழியத்தில் உயர்வான கனங்களையும், சிலாக்கியங்களையும் பெற்றிருப்பார்கள் என்று ஜாண்சன் போதகர் காட்டுகிறார். அவர் E.Vol.11, p.293,294-ல் பின்வருமாறு விளக்குகிறார்: "ஆயிர வருட யுகத்திலும் கொஞ்சகாலத்திலும் ஆரோன் மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களை மனிதர்களின் மத்தியிலுள்ள கிறிஸ்துவின் வாய்க்கருவியாக அடையாளப் படுத்துகிறார். தீர்க்கதரிசியானவளாகிய மிரியாம், யாத். 15:20-ல் ஆரோனுடைய சகோதரியாக அவருடன் இணைந்திருப்பது, மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களுக்கு வாய்க்கருவிகளாகவும், விசேஷித்த உதவியாளர்களாகவும், கீழ்ப்பட்டிருக்கிறவர்கள் என்று மிரியாம் மூலமாக அடையாளப்படுத்தப்படுவதை குறிப்பாகத் தெரிவிக்கிறது. விசுவாசிக்கிற யூதர்களில் பழைய ஏற்பாடு காலத்தில் மூப்பரான பாத்திரவான்கள் ஆவதற்கு போதுமான அளவு விசுவாசம் இல்லாதிருந்தவர்களும், சுவிசேஷ யுகத்தில் மோசேயிலிருந்து கிறிஸ்துவுக்குள் மாற்றப்படுவதற்கு போதுமான அளவு விசுவாசம் இல்லாதிருந்தவர்களும் மற்றும் சுவிசேஷ யுகத்தின்போது விசுவாசிக்கிற புறஜாதி-களில் மரணபரியந்தம் நீதிமானாக்கப்படுதலில் உண்மை-யாய் இருந்தபோதும், பிரதிஷ்டை செய்யாதவர்களும் இழந்து போனதைத் திரும்பப் பெறுகிறவர்களில் விசுவாசமுள்ளவர்களாக ஆகும் ஆயிர வருட யுகத்திற்கு முந்தைய காலங்களில் விசுவாசிகளாயிராத யூதர்கள் மற்றும் புறஜாதிகளிடமிருந்து பிரிந்தும் வேறுபட்டும் இருக்கிற இரட்சிக்கப்பட்டவர்களின் ஒரு வகுப்பாக உருவாக்கப் படுவார்கள் என்பது நமக்குத் தெரியும்".

"அத்தகைய ஆயிரவருட யுகத்திற்கு முந்தைய விசுவாசிக்கிற யூதர்களும் புறஜாதிகளும் யோவே. 2:28 மற்றும் ஏசா. 60:4-ல் உள்ள குமாரர்களாக இருக்கிறார்கள், அதேசமயம் அத்தகைய ஆயிரவருட யுகத்திற்கு

முந்தைய விசுவாசிக்காத யூதர்களும் புறஜாதிகளும் இந்த வாக்கியங்களிலுள்ள குமாரத்திகளாக இருப்பார்கள். இவற்றின் முந்திய பகுதி (குமாரர்கள்) தீர்க்கதரிசியான வளாகிய மிரியாமினால் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது என நாம் புரிந்துகொள்கிறோம்; ஏனெனில் மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களின் விசேஷித்த உதவி-யாளர்களாக அவர்கள் அவர்களுடைய அடையாளமான சகோதரியாக இருப்பார்கள்; மேலும் அப்படி இருந்தாலும் உடன்படிக்கையின்படி பூமியின் வம்சங்களையும், தேசங் களையும் மற்றும் இனங்களையும் ஆசீர்வதிப்பதற்காக மீதமுள்ளவர்களான இழந்துபோனதைத் திரும்பப் பெறும் வகுப்பாருக்கும் மேலாக விசேஷமாக பயன் படுத்தப் படுவதற்கு அவர்கள் ஆபிரகாமின் ஆயிர வருடத்திற்கு முந்தைய வித்தின் கீழான ஒழுங்கமைப்பில் இருப்பார்கள்".

மூப்பரான மற்றும் வாலிபரான பாத்திரவான்களுக்கு வாய்க்கருவிகளாக இருப்பவர்களையும், விசேஷித்த உதவியாளர்களையும், கீழ்ப்பட்டவர்களையும் மிரியாம் அடையாளப்படுத்துகிறார் என கண்டறிந்து கொண்டோம். சத்திய பிரசுரங்களை குறிக்கும் அடையாளங்கள் மற்றும் சின்னங்களாகவும் இருக்கிற வேதாகமத்திலுள்ள இசைக் கருவிகளை நாம் கருத்தில் கொள்வோமாக. எடுத்துக் காட்டாக தேவனுடைய சுரமண்டலம் வேதாகமமாகும். தாவீதின் சுரமண்டலம் நம்முடைய போதகரின் எழுத்துகளில் சிலவற்றை, குறிப்பாக அவருடைய ஆறு புத்தகத் தொகுதிகளைக் குறிக்கிறது. சில தம்புருகள் முக்கியத்துவம் குறைந்த சத்திய எழுத்துக்களை குறிப்பதாக காணப்படுகிறது. மிரியாமின் காரியத்தில் ஒரு மிகவும் தனிப்பட்ட தம்புரு அர்த்தப்படுத்தப்படுகிறது, ஏனெனில் ஒரு தம்புரு, என ஆங்கில அங்கீகரிக்கப்பட்ட மொழிபெயர்ப்பில் (A.V.-ல்) இது சொல்லப்பட்டிருக்கிறதுபோல் இல்லாமல் எபிரெயத்தில் அந்த தம்புரு எனக் குறிப்பாக அழுத்தமாகச் சொல்லப் பட்டிருக்கிறது. ஆகையால் இது இழந்து போனதைத் திரும்பப் பெறும் மற்றவர்களால் பயன்படுத்தப்படுகிறதை விட அதிக முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக, நிறைவேறுதலான கொண்டாட்டத்தில் பூமியிலே பயன்படுத்தப்படுகிற மிக முக்கியமான எழுத்துக்களைக் குறிக்கிறது, ஏனெனில் மற்ற ஸ்திரீகளின் தம்புருகள் எபிரெயத்தில் அழுத்தத்துடன் சொல்லப்படவில்லை. அதிக முக்கியப்படுத்தி அழுத்தமாகக் கூறப்பட்ட ஊழியம் செய்தலானது இதேபோல் மற்ற ஸ்திரீகளின் காரியத்தை விடவும் அதிகமாக மிரியாமின் காரியத்தில் அடையாளப்படுத்தப்பட்டிருக்கிறது, ஏனென் றால் "**அவள் தன் கையிலே தம்புரை எடுத்துக்கொண்டு**" என்று தெளிவாகக் கூறப்பட்டிருக்கிறது. மேலும் அவளுடைய சிறப்பு வாய்ந்த மேன்மையானது மற்ற ஸ்திரீகளை அவள் வழிநடத்துவதின் மூலமாகவும், அவளுக்கு பின்னால் அவர்கள் பின்தொடர்வதின் மூலமாகவும் சுட்டிக்காட்டப் பட்டிருக்கிறது. இவை அனைத்தும் "**வரவிருக்கும் நன்மை யான காரியங்களின்**" அடையாளமாகும். மிரியாம் தன் கையில் தம்புருவுடன் (யாத். 15:20) முன் சென்றது பாவம் மற்றும் தப்பறையின் மீது தேவனுடைய வெற்றியினை கொண்டாடச் செய்வதற்கு சில விசேஷித்த எழுத்துக்களின் மூலமாக மேலே விவரிக்கப்பட்டுள்ள கிறிஸ்துவின் குமாரர்கள் வகுப்பாரின் ஊழியஞ்செய்தலைக் குறிக்கிறது; அவைகளின் பலன்கள் நித்தியமாக - அதிகமாக குறிப்பிடத் தக்கதும், பயபக்தியை தோற்றுவிக்கத்தக்கதும் மனதில் பதிக்கப்பட்டும் இருக்கும்.

நாம் இந்த ஆராய்ச்சியிலிருந்து பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் மிகவும் தெரிந்து கொள்ளப் பட்டவர்கள் இல்லை என்று காண முடியும். ஆனால் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் தெரிந்து கொள்ளப்பட்டவர்கள் ஆவதற்கும் மற்றும் எந்த தெரிந் தெடுக்கப்பட்டவர்களுக்கும் தகப்பனாக ஆவதற்கும் உள்ள தங்களின் இயலாமையைப் பற்றி அதிகமாக கவலைப்பட வேண்டியதில்லை. ஏனெனில் அவர்கள் தேவனுடைய அடுத்த சிறந்த தயவை பெறுவதற்கான மகத்தான சிலாக்கியத்தை - ஆயிர வருட யுகத்திற்கு பிந்திய பெரிய வெற்றி ஆர்ப்பரிப்பு பாடலில் ஸ்திரீகளை மிரியாம் வழிநடத்தியதில் அவள் மூலமாக அடையாளப்படுத்தப்படும் வகுப்பாராக, தெரிந்தெடுக்கப்பட்டவர்களைப் போன்றவர் களின் (குவாசி எலெக்ட்) மத்தியில் உயர்ந்த வகுப்பாராக இருக்கும் சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள். (யாத். 15; E.Vol.11, p.293). அவர்கள் மேலும் 1954-லிருந்து நிறைவேறுதலான நிதனீமியராக உடன் கூட்டாளியான பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்களாகிய மற்றவர்களுக்கு அடையாளமான தகப்பனாக ஆகும் உயர்ந்த சிலாக்கியத்தைப் பெற்றிருக்கிறார்கள்; எஸ்றா 8:20 "**தாவீதும் பிரபுக்களும் லேவியருக்குப் பணிவிடைக்காரராக வைத்த நிதனீமியரில் இருநூற்று இருபது பேரையும், எங்களிடத்தில் அழைத்துக் கொண்டுவந்தார்கள்: அவர்கள் எல்லாருடைய பேர்களும் குறிக்கப்பட்டன.**" ஆம், யேகோவா தேவன் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் யார் என்பதை, குறிப்பாக சேபாவின் ராஜஸ்திரீ வகுப்பாரை அறிந்திருக்கிறார்! மேலும் அடையாளமான தகப்பனாக ஆகும் இந்த சிலாக்கியமானது பிரதிஷ்டை செய்யாத எபிபெனி பாளயக்காரர்களுக்கும் நீடிக்கும். பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் தங்களுடைய வேறுபட்ட திறமைகளின்படி பிரபுக்களான பாத்திரவான்களுக்கு உதவியாளர்களாக உதவ முடியும். பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் பாத்திரவான்களுக்கு கீழான பிரபுக்களாகவும் தளபதிகளாகவும் இருந்து, பரிசுத்த பெரும்பாதையில் முன்னேறிச் செல்ல, "**குமாரத்திகளாகிய**" (ஏசா. 60:4; யோவே. 2:28) தெரிந்தெடுக்கப்படாதவர் களுக்கு உதவுவார்கள். ஏனெனில் முதலாவது கிறிஸ்து மற்றும் சபை இரண்டாவது மூப்பர் மற்றும் வாலிபரான பாத்திரவான்கள் ஆகியோரின் வழிகாட்டுதலின் கீழ் ஆயிரவருட யுகத்தின் பெரிய மிஷனரிகளாக அவர்கள் புறஜாதி ஜனங்களையும் மற்றும் தேவனுடைய வார்த்தை-யிலும், கிரியையிலும் விசுவாசத்தை விட்டுவிட்ட யூதர் களையும் மனந்திரும்பச் செய்வதற்காக எல்லா இடங்களுக்கும் செல்வார்கள்." (யோவே. 2:28; E.Vol.17, p.339 பார்க்கவும்).

சுவிசேஷ யுகத்தின் முடிவில், சாத்தானும் அவனுடைய பிசாசுகளும் முழுமையாக கட்டப்படுவதற்கு முன்பாக, பாவமானது இன்னமும் ஆதிக்கம் செலுத்திக்

கொண்டிருக்கிறபோது பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக் காரர்களும் அவ்வாறே விசுவாச உண்மைத்துவ முள்ளவர்களாய் இருந்து கடுமையாகப் பரீட்சிக்கப்பட்டு, பாத்திரவான்களாக காணப்படுவார்கள். நிச்சயமாக மிரியாம் வகுப்பாரிலுள்ள முதன்மையானவர்களாகவும் மற்றும் பிரதிஷ்டை செய்வதில் அவர்களில் முதலாவதாகவும் இருப்பார்கள்.


விசுவாச உண்மைத்துவம் என்பது நீடித்திருக்கிற ஒரு குணம் என்றும், அது நாம் ஜீவிக்கிற காலம் வரை நீடித்து நிலைத்திருக்கும் என்பதையும் குறிக்கிறது. நாம் விசுவாச முள்ளவர்களாக இருப்பது தற்காலிகமாகவோ அல்லது எழுச்சி தாழ்ச்சியுடனோ – இடையிலே விட்டு விடுகிறவர் களாக இருக்கக் கூடாது. இது ஜீவிய கால முழுவதும் நீடித்திருந்து, எப்போதும் – வளர்ந்து கொண்டிருக்கிறதும் மற்றும் தொடர்ந்தேர்ச்சியான காரியமாகவும் இருக்க வேண்டும். அநேகமாக நாம் இந்த ஜீவியத்தின் கடைசி வரை விசுவாசமுள்ளவர்களாக இருந்தாலும், அதுவும் போது மானதாக இருக்காது. விசுவாச உண்மைத்துவத்தை முடிவு பரியந்தமும், மரணம் வரையிலும் தொடர்ந்து காத்துக் கொள்ள வேண்டும்; ஏனெனில் நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ளும் அனைவரிடத்திலும் தேவன் எதிர் பார்க்கிற விசுவாச உண்மைத்துவத்தில் அத்தகைய ஒரு நடத்தையின் மூலமாக மட்டுமே ஒருவன் நித்திய காலமும் அனைத்திலும் விசுவாசமுள்ளவனாக இருப்பான் என நம்பியிருக்க முடியும். நாம் கர்த்தருக்கு (1) அவருடைய வார்த்தையின் மாணவர்களாகவும், (2) நீதிமான்களாக்கப் பட்ட மனிதர்களாக நீதியின் கோட்பாடுகளைக் கைக் கொண்டு அநீதியானவைகளிலிருந்து விலகியிருக்கிறவர் களாகவும், (3) பலியிடுகிறவர்களாகவும் குணாம்சத்தை வளர்த்துக் கொண்டிருக்கிற பிரதிஷ்டையாளர்களாகவும் மற்றும் (4) விழிப்பும், தீவிர தாக்குதலும், தற்காப்பும் தீங்கனுபவிக்கிற கிறிஸ்தவ வீரர்களாகவும், நம்முடைய தேவ பக்தியில் அதிக விசுவாச உண்மைத்துவமுள்ளவர் களாகவும் இருக்க வேண்டும் என்றும், இந்த நான்கு கிறிஸ்தவ ஆற்றல்களின் பல்வேறு செயல்பாடுகளிலும் துன்பங்களை சகிப்பதிலும் நாம் முடிவு பரியந்தமும் உண்மையுள்ளவர்களாக இருக்க வேண்டும் என்றும் இது அர்த்தப்படுத்துகிறது. மேலும் இந்த நான்கு வழிகளிலும் தேவனுக்கு ராஜ விசுவாசத்துடன் தேவ பக்தியாயிருக் கிறவர்கள் மட்டுமே கிறிஸ்தவ ஜீவியத்தில் ஜெயம் பெற்றவர்களாக தேவனால் அங்கீகரிக்கப்பட முடியும்.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள ஆற்றல்களில் அற்புதமாக ஜெயம் பெற்றிருக்கிறவரான நம்முடைய கர்த்தர் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களுக்கு ஒரு பரிசான – வெகுமதி யாக அவருடைய ராஜ்யத்தில் அவருடன் நித்திய ஜீவனை வாக்களித்திருக்கிறார். வாலிபரான பாத்திரவான்களுக்கு பூரணமான பூமிக்குரிய ஜீவனோடு "**பூமியெங்குமுள்ள பிரபுக்களாக**" இருக்கவும் (சங். 45:16); மற்றும் ஆயிரவருட யுக மத்தியஸ்த ஆட்சியின் போது, விழுந்து போன ஆதாமின் சந்ததியில் மரித்தோர் மற்றும் உயிரோடிருக்கிற கீழ்ப் படிகிறவர்களிடத்தில் இழந்து போனதைத் திரும்பக் கொடுக்கும் வேலையை செய்வதற்கு உதவுவதிலும் அதற்கு பின்பு அவர்கள் நித்திய ராஜ்யத்தில் ஒரு மகிமையுடைய ஆவி ஜீவியாக நித்திய ஜீவனையும் பெறுவார்கள். மீதமுள்ள ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்களுக்கு அவர் மத்தியஸ்த ராஜ்யத்தில் மகிமையுடைய பூரணமான பூமிக்குரிய ஜீவியாக, பூமியிலே ஆயிரவருட யுகத்திற்கு பிந்தைய வகுப்பார்களில் உயர்ந்த வகுப்பாராகிய நிறைவேறுதலான மிரியாம் வகுப்பாராக (யாத். 15:20,21) நித்திய ஜீவனை முயற்சியினால் பெற்றுக் கொள்ளும்படி முன்வைத்திருக்கிறார். தேவனுடைய பிரதிஷ்டை செய்த ஜனங்களில் அனைவருக்கும், அவரு டைய திட்டத்தில் தங்களுடைய இடங்களுக்குத் தக்கப்படி, முடிவு பரியந்தம் விசுவாச உண்மைத்துவமுள்ளவர்களாக இருப்பதற்கு அன்பான புத்திமதியை நாங்கள் கொடுக்கி றோம். ஏனெனில் இது ஒரு பரிசான – வெகுமதியாக அவருடைய ராஜ்யத்தில் நித்திய ஜீவனைக் கொண்டு வரும்.

பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளையக்காரர்களாகும் நம்பிக்கையுடையவர்கள், இனிமேலும் தாங்கள் தள்ளுண்ட வர்களாக இல்லை என்றும், மாறாக கர்த்தருடைய சபைக்குள்ளே ஒரு அற்புதமான அங்கீகாரத்தைப் பெற்றி ருக்கிறார்கள் என்றும் நிச்சயமாக உணர்ந்துகொள்ள முடியும். அதைப் போல 'அந்நியர்களும்' முன்னர் புறம்பாக்கப்பட்டவர்களாகவும் தள்ளப்பட்டவர்களாகவும் இருந்தார்கள். கர்த்தருடன் சேர்ந்தபின்பு அதே போதனை களைப் பின்பற்றினார்கள். நிறைவேறுதலில் வாலிபரான பாத்திரவான்களுக்கும் மற்றும் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்களுக்கும் உள்ள வாக்குத்தத்தங்கள் மிகவும் மனமகிழ்ச்சி அளிக்கின்றன. பிரதிஷ்டை செய்திருந்து, தங்களுடைய இருதயங்களிலும் மற்றும் ஜீவியங்களிலும் தங்களுடைய சக்திக்குத் தக்கவாறு தேவனுடைய போதனை களைப் பின்பற்றி வந்த இந்த பாளயக்காரர்கள் ஆபிரகாமின் பிரதிஷ்டை செய்த ஆவியில் பிரகாசிக்கப்பட்ட, ஆயிர வருட யுகத்திற்கு முந்தைய ஆவியினால் ஜெநிப்பிக்கப்படாத வித்தின் மத்தியிலே எந்த இடமும் இல்லாமல் அவர்கள் நிச்சயமாக தள்ளப்பட்டவர்களாக இருக்கமாட்டார்கள் என்றும், ஆனால் தேவன் அவர்களிடத்தில் அன்புகூர்ந்து, ஏற்றுக்கொண்டு அவர்களுக்கு இந்த ஜீவியத்தில் நூறு மடங்காய் அவருடைய ஆவியை வழங்கி அவருடைய ராஜ்யத்தில் அவர்களுக்கு ஒரு அற்புதமான வெகுமதியை வழங்குவார் என்றும் தெளிவாகப் புரிந்து கொள்கிறார்கள். பொன்னும், வெள்ளியும், மரமும் மண்ணுமான பாத்திரங் கள் இருக்கிற இந்த வீடு நம்முடைய மகா பிரதான ஆசாரியரின் பெரிய வீடாக நிறைவேறுதலில் கருதப்படலாம். சில அதிக கனத்திற்கும் மற்றும் சில குறைவான கனத்திற்கும் உரியதாயிருக்கின்றன. அவைகள் முறையே சிறுமந்தை யையும், திரள்கூட்டத்தையும், மூப்பரான பாத்திரவான் களையும், வாலிபரான பாத்திரவான்களையும், தெரிந் தெடுக்கப்பட்டவர்களைப் போன்றவர்களையும் (குவாசி எலெக்ட்) – அவர்கள் மத்தியில் உயர்ந்த வகுப்பாராக பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்களையும் மற்றும் தெரிந்தெடுக்கப்படாதவர்களையும் குறித்துக்காட்டுகின்றன. (2 தீமோ. 2:20; R 5493,பாரா 6; R 5759, பாரா 1; PT' 72, pp. 34,35).

வாலிபரான பாத்திரவான்களும் மற்றும் பிரதிஷ்டை செய்த பாளயக்காரர்களும் சபையாகிய குமாரர்களையும் மற்றும் திரள்கூட்டமாகிய குமாரத்திகளையும்விட நேர்த்தியான குணங்களையும், கனத்தையும் மற்றும் சுபாவத்தையும் நிச்சயமாகப் பெற்றிருப்பதில்லை (2 கொரி. 6:16-18). ஆனால் பாவமானது இன்னும் அதிகமாக ஆதிக்கம் செலுத்திக் கொண்டிருக்கிற போதுள்ள வளர்ச்சியின் காரணமாக, இழந்து போனதைத் திரும்பக் கொடுத்தலின் குமாரர்களாகவும் குமாரத்திகளாகவும் ஆகிறவர்களை விடவும், மத்தியஸ்த ஆட்சிக்கு முன்பு பிரதிஷ்டை செய்யாதவர்களை விடவும் அவர்கள் நேர்த்தியான குணங்களைப் பெற்றிருப்பார்கள் (யோவே. 2:29; ஏசா. 60:4,9). பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் பிரதிஷ்டை செய்யாத குவாசி எலெக்ட்களையும் மற்றும் தெரிந்தெடுக்கப்படாதவர்களையும் விடவும் மேலும் அதிக கனத்தைப் பெற்றிருப்பார்கள். வாலிபரான பாத்திரவான்கள் ஆயிர வருட யுகத்திலும் மற்றும் 'கொஞ்ச காலத்திலும்' மூப்பரான பாத்திரவான்களின் கீழ் வெளிப்படுத்தல்களின் தரிசனங்களை வழங்குகிற ஆச்சரியமான கனத்தைப் பெற்றிருப்பார்கள்; (யோவேல் 2:28; E.Vol 4, p 319); மற்றும் பிரதிஷ்டை செய்த எபிபெனி பாளயக்காரர்கள் நிறைவேறுதலான மிரியாமாக, இழந்து போனதைத் திரும்பப் பெறுகிறவர்களில் மிக உயர்ந்த வகுப்பாராக, ஆயிர வருட யுகத்திற்கு பிந்தைய துதி மற்றும் விடுதலையின் வாழ்த்துப் பாடலில் மனுக்குலத்தை வழி நடத்துவதற்கும், ஊழியம் செய்வதற்கும் உரிய சிறந்த கனத்தைப் பெற்றிருப்பார்கள். (E.Vol.11, p.293).

செம்மறியாடு வகுப்பாரிலுள்ள சில வித்தியாசங்களின் இந்த ஆராய்ச்சியின் மீது கர்த்தருடைய ஆசீர்வாதங்களை நாம் நாடுகிறோம். இருந்தபோதிலும், ஒரே மாதிரியான ஒரு காரியத்தை மனுக்குலத்தார் அனைவரும் பெற்றிருக்கிறார்கள் என்று நாம் புரிந்து கொள்ள வேண்டும்! சங். 51:5 "**இதோ, நான் துர்க்குணத்தில் உருவானேன்: என் தாய் என்னைப் பாவத்தில் கர்ப்பந்தரித்தாள்.**" எல்லா மனுஷரும் பாவிகளாக பிறந்து, எல்லாரும் கோபாக்கினையின் பிள்ளைகளாக தெய்வீக தண்டனையாகிய மரணத்தின் கீழ் இருக்கிறார்கள். ஆனால் எல்லாரும் ஒன்றுபோல இல்லாதிருக்கிற பிற காரியங்களும் இருக்கின்றன. சிலர் தங்களைக் கட்டியிருக்கிற, பாவத்தின் சங்கிலிகளை வெறுத்து, விடுதலையையும் தேவனிடத்தில் ஒப்புரவாகுதலையும் விரும்புகிறார்கள். மற்றவர்களோ பாவத்தை நேசித்து, தேவனிடத்திலிருந்து பிரிந்திருக்கிறார்கள். அவர்களுடைய சிந்தனைகளில் அவர் இல்லை. இங்கே இரண்டு வகுப்பார்களுடன் உள்ள அவருடைய ஈடுபாடுகளின் வித்தியாசத்திற்கான காரணத்தை நாம் புரிந்து கொள்கிறோம். அவர் வருத்தப்பட்டு பாரம் சுமக்கிறவர்களை குறிப்பாக கவனிக்கிறார்; அவர்கள் தேவனைத் தடவியாகிலும் தேடிக் கண்டு கொள்வார்கள். (அப். 17:27). அவர் இந்த சுவிசேஷ யுகத்திலும் மற்றும் விரிவாக்கப்பட்டிருக்கும் அதனுடைய அறுவடையின் போதும் சத்திய அறிவின் மூலமாக, இயேசுவினிடத்தில் "இழுக்க" விரும்புகிறார். ஏனெனில் இயேசுவினுடைய கரத்தில் அவர்கள் நீதிமானாக்கப்பட்டு, பிரதிஷ்டையில் தேவனால் ஏற்றுக் கொள்ளப்பட்டவர்களாக ஆவார்கள். (ரோம. 12:1). தேவ பக்தியற்றவர்கள் இந்த சுவிசேஷ யுகத்திலும் விரிவாக்கப்பட்டுள்ள அதனுடைய அறுவடையின் போதும் பிரதிஷ்டை செய்வதற்கு "இழுக்கப்படவோ" அல்லது அழைக்கப்படவோ இல்லை. ஆனால் அவர்களுடைய மீட்பர் தேவனுக்கும் மனிதர்களுக்கும் அதாவது உலகத்திற்கும் இடையே மத்தியஸ்த உத்தியோகத்தை எடுக்கும்போது அவர் மூலமாக கையாள விடப்பட்டுள்ளனர். வேதவாக்கியங்கள், பரோஷியா மற்றும் எபிபெனி தூதர்களின் போதனைகளின்படி, "செம்மறியாடுகளாகிய" "பூமியின் ராஜாக்கள்," சில வழிகளில் ஒருவருக்கொருவர் சமமாக இருப்பார்கள். ஆனால் நிச்சயமாக ஒவ்வொரு காரியத்திலும் அல்ல என்று மேலே கூறப்பட்டதிலிருந்து நாம் காண்கிறோம். ***




"நீங்கள் இந்தப் பிரபஞ்சத்திற்கு ஒத்த வேஷந்தரியாமல், தேவனுடைய நன்மையும் பிரியமும் பரிபூரணமுமான சித்தம் இன்னதென்று பகுத்தறியத்தக்கதாக, உங்கள் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள்." ரோம. 12:2.

Visit us at : www.biblestandardindia.com

For English Magazines, Volumes & Translated Tracts, Booklets & Tamil Magazines Contact:

Bro. V. Vincent Jeyakumar

[Representative of India]

Laymen's Home Missionary Movement

#11/119-3, Near Water tank, South Street, Mukuperi - 628 616

(Near Nazareth), Thoothukudi District, Tamil Nadu, India.

E-mail ID : vincent.v31@gmail.com; Cell : 98949 26629

FOR PRIVATE CIRCULATION ONLY